விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 02 திங்கட்கிழமை (14.02.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 57




## கிளிநொச்சியில் நாளை கண்டனப் பேரணி

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திரநேருவும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கிளிநொச்சியில் நாளை கண்டனப் பேரணியொன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. இப்பேரணி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம், கந்தசாமி கோவிலடி ஆகிய இடங்களிலிருந்து இரு பிரிவுகளாக ஆரம்பித்து கிளிநொச்சி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் காரியாலயத்தில் முடிவடையும். அங்கு மனு கையளிப்பைத் தொடர்ந்து கண்டனக்கூட்டம் நடைபெறும். (ச)

# பிரச்சினைக்குத் தீர்வுகாண பேச்சை தவிர வேறுவழியில்லை

## யசூசி அகாசி கொழும்பில் நேற்று தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளில் கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றாலும் பேச்சுவார்த்தை மூலமான தீர்வினைத் தவிர வேறு எவ்வழியும் இல்லை என ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி தெரிவித்துள்ளார். நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்த கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கு நட்வடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த நடவடிக்கையானது சமாதானப் பேச்சுவார்த்தைக்ள் விரைவாக ஆரம்பிக்கப்படும் என்பதையே உணர்த்துவதாக உள்ளது என அவர் கூறினார். நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதானம் என்பது கதிரையில் அமர்ந்து கொண்டு அறிக்கைகள் விடுவதன்மூலம் கிடைத்துவிடப் போவதில்லை.

அதற்காக அர்பணிப்புகள் தியாகங்கள் செய்யவேண்டும் என்பதனை இரு தரப்பினரும் கடந்த இரண்டுவருட ,காலமாக உணர்ந்திருப்பார்கள். எனியாவது அதன்ன

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளினை ஜே.வி.பியே குழப்புகிறது



## சொல்லாமல் சொல்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

**வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படும்போது அரசாங்கத்தோடு தொடர்புடைய சில தரப்புக்கள் அதனைக் குழப்பிவருவதாக ஜனாதிபதி சந்திரிகா குற்றஞ்சாட்டியுள்ளார்.**

நிட்டம்புவவில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசில் அங்கம்வகிக்கும் ஒரு தரப்பினர் சிறு விடயங்களுக்கும் அரசாங்கத்தில் இருந்து விலகப்போவதாக எச்சரித்து வருகின்றனர். தாம் அவர்களை கட்டாயப் படுத்தவில்லை. தேவை ஏற்பட்டால் அவர்கள் விலகிச்செல்லமுடியும். பிரபாகரன் நாட்டின் ஒரு பகுதியை பிரித்து வேறு ஒருநாட்டை உருவாக்க முயன்றுவருகின்றார்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முயலும்போது அரசிலுள்ள ஒரு தரப்பினர் தீர்வுகாணும் விடயத்தில் ஒருசொல் பிழைத்தாலும் அரசை விட்டு வெளியேறப் போவதாக கூறிவருகிறார்கள்.

அவர்கள் வேண்டுமானால் விலகிச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்பணிமனை மீது கைக்குண்டு எறிந்ததற்கான சாத்தியம் இல்லை



கள் விலகிச்செல்லமுடியும். பிரபாகரன் நாட்டின் ஒரு பகுதியை பிரித்து வேறு

# எறிந்ததற்கான சாத்தியம் இல்லை

## உள்ளிருந்தே வெடித்திருக்கவேண்டும் என்கிறது பொலிஸ்

(மன்னார்)

விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறை அலுவலகம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பாக அரச பகுப்பாய்வு திணைக்களம் ஆய்வுகளை இன்று மேற்கொள்ளவுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக பகுப்பாய்வு திணைக்களம் தனக்கு அறிவித்திருப்பதாக பிரதேசத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த பத்தவெல தெரிவித்தார்.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை விசேட பொலிஸ்குழு ஒன்று ஆரம்பித்துள்ளது.

அலுவலகத்தின் ஒரு பகுதியிலிருந்தே குண்டு வெடித்திருக்கிறது. வெளியிலிருந்து ஒருவர் குண்டை எறிந்திருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. எவ்வாறாயினும் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் ஆய்வுகளின் பின்னர் உண்மைநிலை தெரியவரும் என மன்னார் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அரசியல்துறை அலுவலகம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதும், மூவர் காயமடைந்ததும் தெரிந்ததே. (ச-08)

# புலிகளிடம் மர்ம ஏவுகணையாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் விமானப் படை உள்ளது என்றும், விமான ஓடுபாதை உள்ளது என்றும் கடந்த சில வாரங்களாக ஊடகங்களை பரபரப்பாக்கிய படையினர் தற்போது புலிகளிடம் ஒரு மர்மமான விமான எதிர்ப்பு ஏவுகணை உள்ளதாக புதுக்கதை ஒன்றை புகையவிட்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் இறுதி நிகழ்வில் கலந்துகொள்வதற்காக திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி சொர்ணத்தை ஏற்றிவருவதற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிக்கு சென்ற விமானப்படையின் உலங்குவானூர்தியின் விமானி செய்த முறைப்பாட்டிலிருந்து இவ்விடயம் தெரியவந்துள்ளதாக படைத்துறை வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றின் பத்தி எழுத்தாளர் தகவல் வெளியிட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அனுராவிடம் விளக்கம்கோரி ஜனாதிபதி சந்திரிகா கடிதம்

(கொழும்பு)

சுனாமியால் இலங்கை பேரழிவுகளைச் சந்தித்தும் அன்றைய நாளில் வெளிநாட்டில் இருந்த உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க உடனடியாக நாடு திரும்பாதமைக்கு விளக்கம் அளிக்குமாறுகோரி ஜனாதிபதி கடிதம் ஒன்றை சகோதரனுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இதைவிட 100மீற்றர் கரையோர வலயத் தீர்மானத்தை அரசாங்கம் எடுத்துள்ளவேளையில் அதற்கு அவர் சவால்விடுத்தது ஏன் என்றும், அதில் கேட்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் பாகிஸ்தானுக்கான தனது விஜயத்தினை ஆரம்பிக்கமுன்னர் இக்கடிதத்தை ஜனாதிபதி அனுப்பியிருந்தார். இன்னும் இருவாரங்களுக்குள் இதற்குப் பதில் அனுப்பிவைக்கப்படல்வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

சுனாமி ஏற்பட்ட தினத்திலிருந்து அனுரா பண்டாரநாயக்க 14 ஆவது நாளே

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறைக்கைதிகள் நான்கு பேர் கூரையில் ஏறி உண்ணாவிரதம்

(மொனராகலை)

மொனராகலை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கருணா அணியைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் நான்கு பேர் தம்மை விடுவிக்கக் கோரி சிறைச்சாலை கூரை மேல் ஏறி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் மட்டக்களப்பு பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட இருவர் பாதுகாப்பின் நிமித்தம் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து மொனராகலை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்கள்.

கடந்த யூலை மாதம் மட்டக்களப்பு சிறைச்சாலை விளக்கமறியல் கைதிகளாக விருந்த கருணா அணியைச் சேர்ந்தவர்களாக கூறப்படும் இருவர் சிறைக் கைதி ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து மொனராகலைக்கு மாற்றப்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை அகாசி நேரில் சென்று பார்வையிட்டார்

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனுடனான சந்திப்பிற்காக மட்டக்களப்பிற்குச் சென்ற ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாசி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால பாதிக்கப்பட்ட பிரதேசங்களை விடுதலைப் புலிகளுடன் சென்று நேரில் பார்வையிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனுடனான சந்திப்பை முடித்த பின்பு இதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் செய்திருந்தனர்.

ஓந்தாச்சிமடம், பூநொச்சிமுனை ஆகிய இடங்களைப் பார்வையிடுவதற்காக அழைத்துச் செல்லப்பட்ட இவருடன், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் (மார்ஷல்), துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

பூநொச்சிமுனையில் நலன்புரி நிலையமொன்றில் தங்கியிருக்கும் முஸலிம்களையும் அவர் சந்தித்து உரையாடினார்.

இவ் வருகையின்போது அவருடன் சென்றிருந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுககான நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகள் தொடர்பாக எடுத்துக் கூறுகையில்,

இது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் உதவிகள் நேரடியாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்றடைவதற்குரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும் எனறு கேட்டுக் கொண்டார். (ற)

# ஏழு வருட சம்பளக் கொடுப்பனவு ஒரே தடவையில் வழங்கப்படும் ?

(கொழும்பு)

அரச ஊழியர்களின் வீடமைப்புக்கு 7 வருட சம்பளக் கொடுப்பனவினை ஒரே தடவையில் வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்திவருகிறது.

நாலரை வீத வட்டியுடன் கடன அடிப்படையில் இந்த நிதியினை வழங்கியிருப்பதாக அரச நிர்வாக அமைச்சின் நிறுவனப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

திறைசேரியின் அனுமதியுடன் குறிப்பிட்ட கடனை வழங்குவது குறித்து அமைச்சரவைப் பத்திரம் ஒன்றினை அரசாங்கம் சமர்பபித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரச ஊழியர்களின் புதிய சம்பள அடிப்படைகளுக்கு அமைய இந்தக் கடன் வழங்கப்படவிருக்கின்றது.

இதற்கு முன்னர் அரச ஊழியர்களின் வீடமைப்புக்கு அரசாங்கம் 5 வருட சம்பளத்தினையே கடனாக வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (க-4)

# பயிற்சி பெறும் பட்டதாரிகள் விரைவில் ஆசிரிய சேவையில் இணைக்கப்படுவர்

(கொழும்பு)

பயிற்சி பெறும் பட்டதாரிகளை ஆசிரிய சேவைக்கு இணைத்துக்கொள்ளும் செயற்றிட்டத்தைத் துரிதப்படுத்த அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

ஏபரல் மாதம் 30 ஆம் திகதியளவில் சுமார் 20 ஆயிரம் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகப் பிரதிநிதியமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசேட பேச்சுவார்த்தை ஒன்று நிதியமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பயிற்சி பெற்ற பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பாக இந்தப் பேச்சுவார்த்தையின் போது கலந்துரையாடப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

ஆசிரிய சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் ஏப்ரல் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் பூர்த்தியடையும் எனக்குறிப்பிட்ட அவர் மேலும் 20 ஆயிரம் பட்டதாரிகளை அரச நிறுவனங்களிலும், ஏனைய திணைங்களங்களிலும் சேவையில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.(க-4)

# வடமராட்சிப் பகுதியில் கரையொதுங்கும் இந்திய- இந்தோனேஷியப் பொருட்கள்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதி கடற்கரையோரங்களில் இந்தியா மற்றும் இந்தோனேஷிய நாடுகளின் இலட்சனை பொறிக்கப்பட் பொருட்கள் பல கரையொதுங்கி வருகின்றன.

இவ்வாறு கரை ஒதுங்கும் பொருட்களில் வீட்டுப் பாவனைப் பொருடகள், ஆடம்பரப் பொருட்கள் மற்றும் மதுபான வகைகள் எனபனவும் உள்ளன.

அத்துடன், இந்தோனேஷிய நாட்டுத் தேங்காய்கள் பெருமளவில் கரையொதுங்கி வருகின்றன. இவ்வாறு கரையொதுங்கும் தேங்காய்களை இப் பகுதி மககள், சுகாதாரத் துறையினரின ஆலோசனைக்கேற்ப பாவனை கெடுக்காமல் நடுகை பண்ணி வருகிறார்கள். (ற-43)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் புதிய தலைவராக விக்னேஸ்வரன் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 14 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை 10.30 மணிக்கு இணையப் பணிமனையில் தலைவர் ஸ்ரீ.சக்திவேல் தலைமையில் நடைபெற்றது.

இந நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் கலந்து கொண்டார்.

இதில் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கம் வகிக்கும் சர்வோதயம், மகளிர் அபிவிருத்தி நிலையம், செஞ்சிலுவைச் சங்கம், குடும்ப புனர்வாழ்வு நிலையம், மனித முன்னேற்ற நிலையம், சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமுரிய நிறுவனம், அறவழிப் போராட்டக்குழு, வட இலங்கை சர்வோதயம், மக்கள் நலன் காக்கும் பிரிவு, சமூக அபிவிருத்தி மன்றம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், ‘வெண்புறா’ செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்களது பொறுப்பதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இப் பொதுக் கூட்டத்தில் 2004 ஆம் ஆண்டில் இவ் அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் 2005 ஆம் ஆண்டின் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அத்துடன், யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் புதிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ப-19)

# சாந்தை கிராமத்திற்கு மின்வழங்க நடவடிக்கை

(சில்லாலை)

சில்லாலை மேற்கில் உள்ள சாந்தைக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இரண்டு கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய இக்கிராமத்தில் 340 குடும்பங்கள் உள்ளன.

எனினும் இதுவரை காலமும் இதற்கு மின்சாரம் வழஙக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந் நிலையில தற்போது மின்சாரம வழங்கும் வேலைகள் இடம் பெற்றுவருகின்றன.

இதற்கு மககள் தங்களாலான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். 4 அடியாக இருந்த பாதைகள மக்களின் ஒத்துழைப்புடன் 6 அடியாக மாற்றப்பட்டு மின்கம்பங்கள் நடபபட்டு மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சுமார் பத்து நாட்களாக இவ் வேலைகள் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ப-58)

## இராசிபலன்

14.02.2005

(மாசி 02 திங்கட்கிழமை)

சஷ்டி முன்னிரவு 09.41 மணிவரை

அச்சுவினி முன்னிரவு 8.14 மணிவரை

இராகுகாலம் 08.03 - 09.33 மணிவரை

சுபநேரம் 12.33 -02.03 மணிவரை

சஷ்டி விரதம்

| | |
|---|---|
| மேடம் | தொழில் ஆர்வம், காரிய அனுகூலம், நல்ல செய்தி, தெய்வசிந்தை. |
| இடபம் | ஆரோக்கியக் குறைவு, காரிய தாமதம், சுபசெலவு, பிரயாசை. |
| மிதுனம் | நல்ல காரியம், தொழில் முன்னேற்றம், கீர்த்தி, புதிய பொருள்சேர்க்கை. |
| கடகம் | நண்பர்கள் உதவி, செல்வாக்கு, உற்சாகம், காரிய அனுகூலம். |
| சிங்கம் | சரீரப்பிரயாசை, அமைதிக்குறைவு, புதிய முயற்சி, பிரயாணம். |
| கன்னி | காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, விருந்துபசாரம், மனக்கிலேசம். |
| துலாம் | உறவினர் வருகை, காரிய நன்மை, நல்ல சம்பவம், போசன சுகம். |
| விருச்சிகம் | பிரயாண சுகம், கௌரவமான நிலை, உடல்நலன், எடுத்த கருமம் கைகூடும். |
| தனு | உறவினர் மனஸ்தாபம், வியாபார விருத்தி, போசன சுகக்குறைவு, முயற்சி தாமதம். |
| மகரம் | புதிய செய்தி, தொழில் ஆர்வம், காரிய தாமதம், சயன சுகக்குறைவு. |
| கும்பம் | பிரயாண நன்மை, செய்தொழில் விருத்தி, கூட்டு முயற்சி, செல்வாக்கு. |
| மீனம் | அதிக செலவு, கடினவார்த்தை, நிலைமாற்றம், காரிய தாமதம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

- வளவன்

## ஆராய்வு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணங்கள் கிடைப்பதில் குறைபாடுகள் நிலவும் பகுதிகள் குறித்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்தினர் கவனம் செலுத்தியுள்ளனர்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணங்கள் அவர்களுக்கு கிடைக்காத காரணங்கள் குறித்து ஆராயவுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக்ரணவிராஜா தெரிவித்தார்.

கவனயனம் இதற்கு காரணமாக இருக்குமாயின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக கடும் சடட நடவடிக்கை எடுக்கப் படுமென்று திலக் ரணவிராஜா தெிவித்தார். (ப-9)

# வடமராட்சி கடற் பிரதேசங்களில் எல்லை நிர்மாணப் பணி ஆரம்பம்

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டில் உள்ள படையினர் வடமராட்சி கடற்கரைப் பிரதேசத்தில் கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்தை அளந்து அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

படையினரின் இந்த நடவடிக்கை வடமராட்சி மக்களைப் பெரும் விசனமடைய வைத்துள்ளது.

அரசாங்கம் அறிவித்தது போன்று 100 மீற்றர் பின் தள்ளி தாங்கள் குடியிருக்க முடியாது எனவும் தமக்கு இங்கு காணித் தட்டுப்பாடு உள்ளதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதைவிட, தமது வீடுகள், காணிகள் என்பனவற்றை படையினர் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ளடக்கியுள்ளதுடன், இராணுவ முகாமாகவும் பயன்படுத்தி வருகின்றனர்.

முதலில் மக்கள் குடியிருப்புகளை அண்டி முகாம் அமைத்துள்ள படையினர் வெளியேற வேண்டும், அடுத்ததாக அரசிற்கு மக்கள் மீது அக்கறை இருக்குமானால் கரையோரப் பாதுகாப்பு அரண்களைப் பலமாக அமைக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர். (ற-43)

# வவுனியா, மன்னார், முல்லை மாவட்டங்களில் சமுர்த்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்

(புத்தளம்)

வவுனியா, மன்னார், மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சமுர்த்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட புனர்வாழ்வு அபிவிருததி அமைச்சர் ரிஷாத் பதியுதீன், சமுர்த்தி, வறுமை ஒழிப்பு விவகார அமைச்சர் திருமதி பவித்ரா வன்னியா ராச்சியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமுர்த்தி அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டம் அண்மையில் பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற போதே அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இந்த வேண்டுகோளைவிடுத்தார்.

வனனி மாவட்டத்தில் உள்ள விடுவிக்கப்படாத பிரதேசங்களை முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் தேவை குறித்தும் அமைச்சரின் கவனத்திற்கு, அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கொண்டுவந்துள்ளார்.

இம் மூன்று மாவட்டங்களிலும் வாழ்கின்ற மக்களில் பெரும் எண்ணிக்கையானோர் மிகவும் குறைந்த வருமானத்தைக் கொண்டவர்கள். இவர்களை முன்னேற்றுவதற்காக சமுர்த்தி வறுமை ஒழிபபுத் திட்டத்தை கூடிய விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமஎனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இந்த மூன்று மாவட்டங்களிலும் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்களை மேற்கொள்ளுமாறு சமுர்த்தி அமைச்சின் செயலாளர் மற்றும் சமுர்த்தி அதிகார சபை பணிப்பாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு பணிப் புரை விடுத்துள்ளார். (ற-15)

## இன்று ஒரு தகவல்

# நெருப்புக்கோழி

எனக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் வந்தார். அவர் ஒரு அறுவை மன்னர். "இந்த உலகிலேயே இறக்கை இல்லாமல் பறப்பது எது?" என்று ஒரு கேள்வியைக் கேட்டார். "எனக்குத் தெரியது" என்றேன். "என்ன சார் இது ? இது கூடத்தெரியவில்லையா. மனிதன் தான் அது" என்றார் அவர். அதுவும் சரி என்று தான் தோன்றுகிறது. இப்போதுள்ள மனிதன் எதற்கெடுத்தாலும் பறந்து கொண்டு தான் இருக்கிறான். காலம் அப்படியாகிவிட்டது என்று நினைக்கும் போதே அடுத்த கேள்வியைக் கேட்டார் அவர்.

அவர் அப்படித்தான், ஆள் அகப்பட்டால் லேசில் விடமாட்டார். "இந்த உலகத்திலேயே...." என்று ஆரம்பித்தார் சரி கேள்வியைச் சொல்லுங்கள் என்றேன். 'இறக்கை இருந்தும் பறக்க முடியாத பறவை எது?' என்றார். இதற்கும் பதில் தெரியாது என்று சொல்லிவிட்டால் உடனே அடுத்த கேள்வியைக் கேட்க ஆரம்பித்துவிடுவார். அதனால் கொஞ்சம் சிரமப்பட்டு யோசித்து தட்டுத்தடுமாறி ஒரு பதிலைக் கண்டுபிடித்தேன். 'நெருப்புக்கோழிதான் சார் அது' என்றேன். 'சரி' என்று ஒத்துக்கொண்டார்.

அதன்பின் அவர் அடுத்த கேள்விக்குப் போகவில்லை. ஆனால் அதற்குப்பதிலாக அதிலேயே துணைக்கேள்வியைப் போட ஆரம்பித்துவிட்டார். "நெருப்புக்கோழி நெருப்பைத்தின்னுமா?" என்றார். சரி இன்று இவரிடம் வசமாக மாட்டிக் கொண்டோம் என்று முடிவு செய்துவிட்டேன். ஓரளவுக்கு அவருடைய துணைக்கேள்விகளிலிருந்து தப்பிக்க வேண்டும் என்றால் அதற்கு ஒரே வழிதான் உண்டு. அதாவது நெருப்புக்கோழியைப் பற்றி எனக்கு என்னென்ன தெரியுமோ அதையெல்லாம் அவரிடம் ஒத்துக்கொள்ளவேண்டியது! அதைவிட வேறு வழி எதுவும் கிடையாது. அதனால் அதே வழியில் போக ஆரம்பித்துவிட்டேன்.

இந்த உலகத்திலேயே மிகப் பெரிய பறவை எதுவென்று கேட்டால் அதற்கும் நெருப்புக்கோழி என்று தான் பதில் சொல்ல வேண்டும். ஏனென்றால் அது எட்டடி உயரம் 135 கிலோ எடை! அதாவது கிட்டத்தட்ட இரண்டு மூட்டை அரிசியின் எடை. நம்மீது அது வந்து விழுந்தால் எப்படி இருக்கும்? யோசித்துப் பாருங்கள். உலகத்திலேயே மிகப்பழமையான உயிரினம் அதுதானாம். சுமாராக 5 அல்லது 6 கோடி வருடங்களுக்கு முன்பே நெருப்புக்கோழி இந்தப் பூமியில் இருந்து கொண்டிருந்ததாம்.

அந்தக் காலத்தில் இருந்த பல பிராணிகள் இப்போது இல்லாமல் போய்விட்டது. நெருப்புக்கோழி மட்டும் இன்னும் இருக்கிறது என்றால் அது ஆச்சரியம் தான். இருந்தாலும் இப்போது அது அந்த அளவிற்கு அதிகமாக இல்லை. மத்திய ஆபிரிக்காவில் தான் இப்போது அது அதிகம் இருக்கிறது. எப்போது பார்த்தாலும் தீனி தீனி என்று அலைந்து கொண்டிருக்கும். ஒருநாள் இருந்த இடத்தில் மறுநாள் இருப்பதில்லையாம். 30,40 கோழிகள் சேர்ந்து கூட்டம் கூட்டமாகத்தான் மேயப்போகுமாம். பெட்டையை விட சேவல் கொஞ்சம் பெரிதாக இருக்குமாம். புல்,பூண்டு,செடி, கொடிகளைத்தான் சாப்பிடும். சின்னச்சின்ன புழு, பூச்சி,எலி, பல்லி, ஓணான் போன்ற ஏதாவது தட்டுப்பட்டாலும் விடாதாம்.

சிறு சிறு கல்,கூழாங்கல் இவற்றைக்கூட அவ்வப்போது விழுங்கிவிடும். எதற்காக? இந்தக்கற்கள் உள்ளே போய் கிரைண்டர் மாதிரி வேலை செய்யும். தீனியை அரைத்துக் கொடுப்பதற்கு தான் அவை உபயோகமாகும். நம்மை மாதிரி அதற்கு பல் இருந்தால் வாயிலேயே அரைத்துக் கொள்ளலாம். பல் இல்லை அதனால் அப்படி செய்கிறது. பல் இருந்தும் நாம் சில சமயம் கல்லை விழுங்கிவிடுகிறோம்.

நெருப்புக்கோழிக்கு ஒரு குணம். கண்ணுக்குப் பளபளப்பாக ஏதாவது தெரிந்தால் அதை விழுங்கிவிடும். அதனால் தான் சிலர் சொல்வார்கள் நெருப்புக்கோழி உலோகங்களை ஆகாரமாகச் சாப்பிடும் உலோகம் அதற்கு ஆகாரமில்லை. அவற்றை செரிக்க வைக்கவும் முடியாது. இதேபோல் தான் நெருப்புக்கோழி நெருப்புத்துண்டை விழுங்கும் என்று சொல்வதும் அது ஒரு மூடநம்பிக்கை. நெருப்புக்கோழிக்கு பறப்பது தான் சிரமமே தவிர அது ஓட ஆரம்பித்தால் பிடிப்பது கஷ்டம். புலி,சிங்கம் போன்றவற்றைக் கண்டால் 40 கிலோ மீற்றர் ஓடும் வந்து பிடிக்க முடியாது. அதுபோல் ஓடத்தெரிந்தால் இந்த அறுவை மன்னரிடமிருந்தும் தப்பலாம். முடியவில்லையே என்ன செய்வது? அதனால் நெருப்புக்கோழி பற்றிய இவ்வளவு விடயத்தையும் கூறினேன்.

இவ்வளவையும் கேட்டதற்குப் பின்பும் அவர் இன்னொரு கேள்வி கேட்டார். "சார் நீங்கள் கறிக்கோழி பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" தெரியுமே! புறொய்லர் என்று சொல்லுவோமே அதுதானே என்றேன். "ஆமாம்! அதுவேதான்! இப்போது நான் கேட்பது என்னவென்றால் ஒரு நெருப்புக்கோழியை கறிக்கோழியாக மாற்ற முடியுமா?" என்றார். அது எப்படி முடியும்... அதுவேறு இதுவேறல்லவா? என்றேன். அவர் "முடியும்" என்றார். "எப்படி?" என்றேன். "நெருப்பைத் தண்ணீரில் நனைத்தால் கரியாகி விடும். அதனால் நெருப்புக்கோழியை தண்ணீரில் நனைத்தால் கறிக்கோழியாகி விடும்" என்றார். இப்போது எனக்கு உண்மையாகவே 40 கிலோ மீற்றர் வேகத்தில் ஓட வேண்டும் போலிருக்கிறது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# முகாமைத்துவ சேவையில் இணையாதோருக்கு ஓய்வூதியத் திணைக்களம் கட்டாய ஓய்வு வழங்கும்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் இதுவரை காலமும் இருந்து வந்த ஆறு முக்கிய பதவிகள் நீக்கப்பட்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரச முகாமைத்துவ இணையச் சேவையில் இணைந்து கொள்ள விரும்பாத அரச ஊழியர்கள் ஓய்வு பெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான சுற்றுநிருபம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளதாக ஓய்வூதியத்திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் அரச முகாமைத்துவ இணையச் சேவையில இணைந்து கொள்வதற்கான விருப்பத்தை தெரிவிக்காத அரச ஊழியர்கள் ஓய்வு பெறுபவர்களாகக் கணிக்கப்படவுள்ளனர்.

இவ்வாறு ஓய்வு பெறும் ஊழியர்கள் பத்து ஆண்டு காலம் அரசசேவையைப் பூர்ததிசெய்திருப்பார்களாயின் அவர்களது சேவைக்காலத்தில் 5 ஆண்டுகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

இவர்களுடைய சம்பளத்துடன் வரவு- செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவும் வழங்கபபடவுள்ளது.

பதது ஆண்டுகளுக்குக் குறைவான சேவையை உடையவர்கள் ஓய்வு பெறும் பட்சத்தில் 5 ஆண்டுகளுக்கு ஒரு ஆண்டு வீதம் சேவைக்காலம் கணிக்கப்படவிருப்பதாகவும் ஓய்வூதியத்திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

எனினும் இவர்களுக்கு மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது. பத்து ஆண்டுகளுக்கு மேல் சேவையைப் பூர்த்தி செய்த, சுய விருப்பத்தின் பேரில் ஓய்வுபெறுகின்ற அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவருக்கும் 55 வயது பூர்த்தியாகும் வரை ஓயவுக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொருவருக்கும் மார்ச் மாதம் 24ஆம் திகதி ஓய்வூதியம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க முகாமைத்துவ ஊழியர் சேவையில இணைந்து கொள்வதற்காக 5 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் விருப்பம் தெரிவித்திருப்பதாக இணையச் சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (ற-9)

# ஆழிப்பேரலை அனர்த்தக் கொடுப்பனவை வழங்கக் கோரி திருமலையில் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

திருகோணமலைப் பட்டணமும்,சூழலும் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த திருக்கடலூர் கிராம மக்கள தமகது அரசினால் வழங்கப்படுகின்ற சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தக் கொடுப்பனவு 2 ஆயிரத்து 500 ரூபாவை உடனடியாக வழங்குமாறு கோரி நேற்று முன்தினம் காலை வீதிமறியல் போராட்டம் ஒன்றினை நடத்தியுள்ளனர்.

இதன் காரணமாக திருகோணமலை வடக்குப் பிரதேச போக்குவரத்துக்கள் முற்றாக செயலிழந்தன. நேற்று முன்தினம் காலை 6.30 மணிக்கு ஆரம்பித்த இப்போராட்டம் மதியம் வரை நீடித்தது. பிரதேச செயலாளர் ஆர்ப்பட்டப் பேரணி நடைபெற்ற இடத்திற்கு வந்து சகலருக்கும் இக் கொடுப்பனவு வழங்கப்படும் என உறுதி அளித்ததைத் தொடர்ந்து போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

சுனாமியால் 560 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட இக் கிராமத்தில் 450 பேருக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உலர் உணவு நிவாரணக் கூப்பன்கள் வழங்கப்பட்டன. 110 குடும்பங்களுக்கு இவை வழங்கப்படவில்லை. இதுவும் பிரதேச செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இக்கிராமத்தின் அயலில் உள்ள விஜிதபுரம் என்னும் சிங்கள மக்கள் வாழும் கிராமத்தைச் சேர்ந்த அனைவருக்கும இந்நிவாரணஙகள ஏற்கனவே முழுமையாக வழங்கப்பட்டிருந்தது. இவ் இரண்டு கிராமங்களும் ஒரே கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (ற-4)

# கௌசல்யன் குழுவினரின் கொலை குறித்து விசாரணை செய்ய ஆணைக்குழு நியமிக்குக

## ஆசிய மனித உரிமைகள் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை-மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் போராளிகள்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யபபட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு அரசாங்கம் உடனடியாக ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என ஆசிய மனித உரிமைகள் அமைப்புக் கேட்டுள்ளது.

ஆசிய மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் பிறட் அடெம்ஸ் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் குழுவினரின கொலைக்கு அரசு கண்டனம் தெரிவித்துள்ளமையை எமது அமைப்பு வரவேற்கின்றது.

நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதற்கு முன்னா இத்தகைய படுகொலைகளை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். ஏனெனில் யுத்த நிறுத்தத்தை பாதிக்கக் கூடிய வகையில் இடம்பெறும் படுகொலைகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே பெரும்பாலும் இடம் பெறுகின்றன.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயகத்தில் இருந்து பிரிந்து சென்றவர்களே கிழக்குப் பகுதியில் சிவில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றனர் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (க-60)

# அவசரகாலச் சட்டம் அமுல்; ஜனநாயகத்துக்கு விரோதம்

## என்கிறார் ஐ.தே.க. எம்.பி

(கொழும்பு)

அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தமையானது நாட்டின் ஜனநாயகத்துக்கு விரோதமான பயணத்தின் ஆரம்பம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெகலிய றம்புக்கவல தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்வதற்கான சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்பாக ஊடகவியலாளருக்கு தெளிவுபடுத்தும் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்கள் அரசுக்கு எதிராக மேற்கொண்டுவரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்த அரசு தயாராகி வருகின்றது.

அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கி ஆர்பாட்டம் நடாத்துவதினாலே நிவாரணப் பொருட்களை விநியோகிக்க முடியாதுள்ளதாகவும் இதனால் அவசரகாலச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டியுள்ளதென்றும் அரசு கூறுகின்றது. இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் நாங்கள் அனைவரும் ஜனநாய கத்துக்கு எதிரான முறையில் அமையும் அவசரகாலச சட்டத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தால் தான் பல தடைகளை தாண்டமுடியும்.எனவே இதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்த தயாராகுவது ஜனநாயகத்தை மதிக்கும் அனைவரினதும் பொறுப்பாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

# சுயதொழில் வாய்ப்பை ஊக்குவிக்க பின்தங்கிய மக்களுக்கு கடனுதவி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுயதொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் சமூக, பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் வாழும் மக்கள் மத்தியில் கடனுதவி வேலைத் திட்டங்களை ஒருங்கிணைத்து முன்னெடுத்து வருகின்றது.

அவவகையில் கடந்த புதன்கிழமை பூம்புகார் என்னும் இடத்தில் 30 குடும்பங்களுக்கு நெக்கோட திட்டத்தின் உதவியுடன் மூன்று இலட்சம் ரூபா கடனை வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா பத்தாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் உதவியானது சுயதொழில் வாய்ப்பை இழந்து வாழும் குடும்பங்களுக்கு ஊக்குவிப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

# வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் செய்ய வேண்டும்

## அமைச்சர் விஸ்வவர்ணபால

(கொழும்பு)

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் செய்ய வேண்டும் என பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்வவர்ணபால தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகள் மாற்றப்பட வேண்டும். சுனாமியின் பின்னர் இதற்கான அவசியம் உணரப்பட்டுள்ளது.

இலங்கையின் அனைத்து இன மக்களினதும் இறைமையைப் பாதுகாக்கும் விதமான புதிய வெளிநாட்டுக் கொள்கை ஒன்றை விரைவில் அமுல்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுனாமியின் பின்னர் வெளிநாட்டவர்கள் அதிகளவில் இலங்கைக்குள் வருவதற்கு இலங்கையின் தற்போதைய வெளிநாட்டுக் கொள்கைகளே காரணம் என்றும் பிரதி அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (க-9)

# இதயங்கள் இணையும் தினம்

காதல் என்பது ஓர் அற்புத மான உணர்வு, ஓர் அழகான கனவு, ஒரு சுகமான உறவு, ஒரு பிரார்த்தனை, அது சந் தோஷக் கொண்டாட்டமா... ஆனந்தத் தாண்டவமா? தன் வாழ் நாளில் காதல் வயப்படாத மனிதனே இல்லை என்றே கூற லாம்.

காதல் குருட்டுத்தனமானது *(LOVE IS BLIND)* என்கிறார் கள். ஆம்! அது இன, மொழி, சாதி, சமயத்தவர்களைக் கடந்துதான். காதல் தேசங் களை ஊடறுத்து நேசம் வளர்க கின்றது. காதல் முழு உலகை யுமே ஆட்டிப்படைக்கின்றது.

**காதலை புனிதமாகப் போற்றும் வரையில் அந்தப் புனிதத்தன்மைக்கு சமர்ப்பணமாக ஒரு சிவப்பு ரோஜாவை அன்பளிப்பு செய்து காதலர் தினத்தைக் கொண்டாடினால் தான் என்ன?**

## காதலின் மகத்துவம்

மனித வரலாற்றில் காதல் தான் நாகரிகத்தை வளர்த் தது, குடும்பத்தை உருவாக் கியது, கட்டுப்பாட்டை விதை த்து கண்ணியத்தைப் பரப்பி யது. "காதல் என்பது பொது வுடமை, கஷ்டம் மட்டும் தான் தனியுடமை" என்று கூறப்படு கின்றது.

காதலுக்கு வயது இல்லை காதல் உணர்வுகளினால் ஆட் கொள்ளப்படாத மனிதர்களே உலகில் இல்லை. இளமைக் காலம் காதல் பூத்துக்குலுங் கும் காலம். டீன்ஏஜ் பருவம் உணர்சசிக் கொந்தளிப்பான பருவம். இக் காலத்தில் வரும் காதலுக்கு வேகம் இருக்கும். விவேகம் இருக்காது. பருவக் கோளாறினால் ஏற்படுவது தான் இந்தக் காதல். காதல் பற்றிய தெளிவு இக்காலத்தில் இருக்காது.

மனிதனைப் பொறுத்தவரை தன் வாழ்நாளில் காதல் வயப் படாத மனிதனே-இல்லை என்றே கூறலாம். ஆனால் காதல் வயப்படும் எல்லோரும் அதில் ஜெயித்து விடுகிறார்களா...? எல்லாக் காதல்களும் கல்யா ணத்தில் முடிகின்றதா? என் றால் அதுதான் இல்லை. ஆனால் காதல் வயப்படும் அனைவரும் தங்கள் காதல் ஜெயிக்க வேண்டும், தாங்கள் விரும்பிய வாழ்க்கைத் துணையுடன் இறுதிக்காலம் வரை வாழவேண் டும என்றே இந்த முயற்சியில் முழு மூச்சாக ஈடுபடுகின்றனர்.

ரோமியோ ஜூலியற், லைலா மஜ்னு, அம்பிகாபதி அமராபதி, சாஜகான் மும்தாஜ் போன்ற இலட்சியக் காதலர்கள் பற்றி சரித்திரம் கூறுகின்றது.

இந்தக் காதல் எவ்வளவு சக்தியானது என்றால் உலக ளாவிய ரீதியில் அதற்கென்றே ஒரு தினத்தைக் கொண்டாடும் அளவுக்கு வலிமை பெற்று விட்டது.

## காதலர் தின வரலாறு

பெப்ரவரி 14 காதலர் தின மாக கொண்டாடப்பட்டு வருகி றது. இதற்கு வலன்டைன்டே என்று ஏன்பெயர் வந்தது? இதற்கு பின்னால் சுவையான (!?) பின்னணி உள்ளது.

பெப்ரவரியில் ரோம் நாட் டில் லுபர்கஸ் என்னும் கடவுளை வணங்கி வந்தனர். அப்போது ஒரு பெட்டியில் இளம்பெண் களின் பெயர்கள் எழுதப்பட்ட காகிதம் இருக்கும். திருமண மாகாத ஆண்கள் ஒரு பெயரை அதிலிருந்து எடுப்பர். தேர்ந் தெடுக்கப்படும் பெண், அந்த ஆணின் துணையாக வருடம் முழுவதும் இருப்பாள். இந்த ஜோடிகளில் பலர் பின்னர் திரு மணம் செய்து கொள்வதும் உண்டு.

கிறிஸ்தவ பாதிரியார்கள் லுபர்கஸூக்கு பதிலாக ஒரு துறவியின் பெயரை இந்த நாளுடன் இணைக்க விரும்பி னர். அப் போது அவர்கள் கி.பி.270 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வலன்டைனைப் பற்றி அறிந்தனர். போப் ஜெலாஸியஸ் லுபர்கஸ் நாளை வலன்டைன் நாளாக அறி விததார். அதுமட்டுமல்லாமல் பெண்களின் பெயரை பெட் டியில் சேர்ப்பதற்குப் பதிலாக, துறவிகளின் பெயரை எழுதிப் போட்டனர். எந்தத் துறவியின பெயர் வருகிறதோ, அந்த வரு டம் முழுவதும் அவரைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று மாற்றி னார். ஆனால் அப்போது திரு மணமாகாத ஆண்கள், தங் களுக்கு பிடித்த பெண்களுக்கு வலன்டைன பெயர் பயன்படுத்தி தகவல்கள் பரிமாறிக்கொண் டனர்!

சரி வலன்டைனின் கதை என்ன? கிளாடியஸ் என்னும் மன்னர் திருமணமான ஆண்கள் தனது குடும்பத்தின் மீதுள்ள அன்பின் காரணமாக போரில் முழுமையாக ஈடுபட மாட்டார் கள் என்று நம்பினார். எனவே தன் நாட்டில் திருமணத்திற்குத் தடை விதித்தார்.

ஆனால் வலன்டைன் என்பவர் தன்னடம் வரும் ஜோடிகளுக்கு ரகசியமாகத் திருமணம் செய்து வைத்தார். இதனை அறிந்த அரசர், அவரை சிறையில் அடை த்து பேஜனிசத்திற்கு மாற்ற முயற்சித்தார். முடியாத அரசர் அவரை சிரச்சேதம் செய்ய உத்தரவிட்டார்.

**★கனிந்தால் வெற்றி கசந்தாலோ தோல்விதான்**
**★காதலில் புரிந்துணர் இன்றேல் பிரிவினையே உண்டாகும்**

அப்போது, வலன்டைனுக்கு ஆதரவானவர்கள், சிறையில் அவருக்கு தகவல் அனுப்பினர். அவர்களில் சிறை அதிகாரி யின மகளும் ஒருவர். சிறை அதிகாரி வலன்டைனிடம் ஒரு கோரிக்கை வைத்தார். பிறவி லேயே கண்தெரியாத தன் மகள் ஜூலியாவிற்கு பாடம் நடத்த சொன்னார். வலன் டைன் கணிதம், ரோம வரலாறு, கடவுளைப் பற்றி போதித்தார். ஜூலியா தன் அறிவுக்கண்க ளால உலகத்தைப் பார்த்தார். இருவருக்குள்ளும் இருந்த அன்பு நாளடைவில் காதலாக மாறியது.

அவர் இறப்பதற்கு முன் ஜூலியாவிற்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் 'உன்னு டைய வலன்டைன' என்று கையெழுத்திட்டார். பின்னர் இந்த நாளில் காதலைத் தெரி விப்பதும், காதலர்களுக்குக் கடிதங்கள் அனுப்புவதும் வழக்க மானது.

## மகிழ்ச்சிக்குரிய தினம்

கவிதைக்கு, கதைக்கு, திரைப்படத்துக்கு கவர்ச்சி யான தலைப்பாய் அமைந்து விடடுப் போகிற இந்த நாள், மனிதர்கள நம் வாழ்விலும் வருடததுக்கு ஒரு முறை வந்து விட்டு போனால் தான் என்ன? மனிதர்கள் நாம் ஜனனித்த நாளை நினைவு கூருகின்றோம். திருமண நாளையும் நினைவு கூர்ந்து கொண்டாடுகிறோம் என்றால், ஆண்-பெண் இரு வருக்குமே வரவேண்டிய காதல் என்கிறமன உணர்வைக் கொண் டாட, ஓர் நாள் காதலர் தின மாய் வந்து போவதில் என்ன தப்பு இருக்கின்றது.

காதலைப் புனிதமாய் போற் றும் வரையில் அந்தப் புனிதத் தன்மைக்கு சமர்ப்பணமாக ஒரு சிவப்பு ரோஜாவை அன்ப ளிப்புச் செய்து காதலர் தினத தைக் கொண்டாடினால் தான் பிழை என்ன?

"நான் உங்களைக் காத லிக்கினறேன்" என்று சொன்ன ஆண் மகனை கால் செருப் பைக் கழற்றி அடிக்கிற பழக்கம நம் பெண்களில பலருக்கு உண்டு.

தான் கொண்ட காதலை வெளிப்படுத்த அந்த ஆண் மகனுக்கு சுதந்திரமும் உரி மையும் உண்டு. அதனை ஏற் றுக்கொள்ளவோ அல்லது புறக்கணிக்கவோ பெண்ணுக் கும் உரிமையும், சுதந்திரமும் உண்டு.

ஆனால் காதலைப் புறக் கணிக்கும் போது "உங்கள் காதலை என்னால் ஏற் றுக் கொளள முடியாது. மன்னிக்க வேண்டும்" என்று மனிதனாக நடந்து கொள்ள முயல்கி றோமா? இதுவே முக்கியம்.

காதல் என்கின்ற ஒரு மனித உணர்வனால் மட்டுமே ஜாதி, மத, போதங்களை கடந்து, நாம் மனிதர்கள் எனும் உணர் வை நமக்குள் ஏற்படுத்த முடி யும என்பது அனைவரினது கருத்தாகும். அதனால் இன்று உலகம் பூராகவும், நாம் சந் தித்த பற்பல ஜாதி, மத, பேதங் களை அடிப்படையாய்க் கொண்டு நடக்கும் யுத்தங்கள் ஓயலாம்.


ஆதலால், காதலை நாம் வரவேற்க முயலவேண்டும். காதலர்கள் மட்டுமல்ல, கல் யாணமான கணவன், மனைவி கூட காதலர் தினமதில் ஓர் ஒற்றை சிவப்பு ரோஜாவை பரி சாக அளித்து, நாம் இன்னும் காதலர்களே என்ற உணர்வை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இயந்தரமயமாகிவிட்ட வாழ்க்கையில் எத்தனையோ கடமை உணர்வுகளுக்கு மத்தி யில் காதலை நினைத்துப் பார்க்க "ஒரு காதலர் தினம்" வேண்டுமல்லவா?

காதலர்களே! காதலர் தினத்தை வெறுமனே கேளிக் கையாக நினைக்காமல் எனக் குள் இன்னும் காதல் சாக வில்லை, வாழ்ந்து கொண்டி ருக்கிறது என்பதை காதலர் தினத்தில் உறுதிப்படுத்திக் கொள்ள முயலுங்கள்.

அன்னையரே, தந்தையரே, காதல் திரைப்படங்களை பார்த்து கண்ணீர் விடும் நீங் கள், உங்கள் பிள்ளைகள் உகந்த வயதுக்கு வந்த பின் ஒரு காதலனாகவோ ஒரு காதலியாகவோ உருவெடுக்கும் போது, அவர்கள் காதலுக்கு, ஜாதி, மத, பேதம் என்ற தடைக் கற்கள் போட்டு, காதலர் களின் உணர்வுகளை மரணிக்க வழி வகுக்காதீர்கள்! ஒற்றை சிவப்பு ரோஜாவால் காதலுக்கு அர்ச்சனை செய்திடுவோம்!! மறக்காமல் காதலர் தின மன்று!!! □

நோயல்



## நம் காதல் அன்றும் இன்றும்

அன்று
செந்தீயில் துளிர்த்து
எரி மலையில் தளைத்தது
நம் காதல்
இன்று
உன் மௌனக் கார் மேகத்தில்
என் இரு விழி பொழியும்
பெரு மழையில்
கருகிக் கொண்டிருக்கிறது

பிரம்ம சாத்வி

## காதலித்துப் பாருங்கள்

காதல்...!
மலரினும் மெல்லிய
இனிய உணர்வு! - அது
பாறையான மனதையும்
பனியாக உருகவைக்கும்
தேசம் கடந்து நேசம் வளர்க்கும்
காலங்கள் கடந்தாலும்
பசுமையாய் நினைவு தரும்
காதலித்துப் பாருங்கள்!
சோதனைகளையும்
சாதனையாக்கும் வலிமைதரும்
உங்களை நீங்கள் உணர
காதலித்துப் பாருங்கள்

எஸ். விக்கினேஸ்வரன்

## அழியாத நினைவு

மனதார நேசித்தேன்
மறக்கச் சொல்லி
விலகிவிட்டாய்
மௌனமாய் அழுகிறேன்
உன் நினைவு தரும்
வலி கண்ணீரிலும்
கரைய மறுக்கிறது
தொலைந்து போன
சந்தோசத்தை
தேடித்தந்த நீயே
முடிவில்லாத
துயரத்தை
தொடக்கி வைத்துவிட்டாயே
அன்புக் காதலியே
அடி மனதில் ஆசையை
விதைத்துவிட்டு
இன்று
அமைதியை பறிமுதல்
செய்ததில் உனக்கென்னடி
இலாபம்
இன்றைய இப் புனித நாளிலாவது
ஒரு முறை என் கண்ணில்
பட்டுப்போ

துஷ்யந்தன்

## இன்றும் வாழ்கிறேன்

என் காதலியே
நாலு வருடக் காதல்
நாவுறு பட்டதுபோல்
நம்பிய தெய்வம்
கைவிட்டது ஏன்?
நாம் செய்த பாவங்களா?
அல்ல விதிசெய்த விளையாட்டா?
கதியற்றுக் கலங்குவது
நீ மட்டுமல்ல
நானும் தான்
கடைசிவரையும்
சேருவோம் என்ற
நம்பிக்கையில்
நான் இன்றும்
கற்பனைகளுடன்
ஏனெனில் பெண்ணே
இந்தக் காதலர்
தினத்தில் நாம் சேருவோம்
என்ற நம்பிக்கையில்

துஷி

## நியாயமா தாயே...?

உன்னருகில் பிறந்து
உன்னருகில் வளர்ந்து
உன்னாலே உணவுண்டு
உன்னாலே மகிழ்ந்த
என் கணவனது அஸ்தியை
என் குழந்தையின் கண்முன்
உன்னிலேயே கரைக்கின்றேன்
உனக்கே இது
நியாயமா தாயே...?

பா.சத்யா,
மீசாலை.

## கரிச்சாம்பல் இது!

அரவணைத்த குழந்தையுடன்
அள்ளி எடுத்து பாத்திரத்தில்
கொண்டுசெல்லும்
அதிசயப் பொருள்தான் என்னே?
ஆழி அலையினில் அள்ளுண்ட
ஆருயிர் கணவருக்கு
ஆத்மா சாந்திப் பிரார்த்தனைக்கு
கங்கைக் கரைதனிலே
கரைக்கவென்று எடுத்துச்செல்லும்
கரிச்சாம்பல் இது!

திருமதி.S.பாக்கியநாதன்,
வட்டுக்கோட்டை.

## மௌனத்தின் அஸ்தி...



அன்புக் கணவனைப்
பறித்துச் சென்ற
கடலன்னையிடமே
பொறுமையுடன்
கணவனது அஸ்தி கரைக்க
மகளையும்
அழைத்துக்கொண்டு
செல்கிறாயா பெண்ணே?

ந.நிகா,
உடுவில்.

# தேடல்கள் – 46

## புலம்பல்

பொறுமையின் அன்னையே!
உனக்கு கோபம் வந்ததம்மா
ஏழை என் இன்பவாழ்வு
சிதைந்ததம்மா
உண்டி முதல் உடை வரை
நதான் அள்ளித்தந்தாய்
சில நிமிடத்தில் எம்மவரை
ஏன்தான் அள்ளிச் சென்றாய்?
உறவை இழந்த என்
பச்சிளங் குழந்தை
உன்னிடம் கேட்பது...
தாயே உனக்கு மீண்டும்
கோபம் வருமா...?

ப. சுஜந்தினி,
கொம்மாந்தறை.

## நிலைமாறுமா?

நாடு கணனிமயமானால் என்ன
வளர்முக நாடானால் என்ன- இங்கு
ஒரு செம்புத் தண்ணீருக்கு
அல்லலுரும் நிலை மாறுமா...?

ந.வவா,
உடுவில்.

## ஏது வழி...?

கரைமீது காதல் கொண்டு
கரை தழுவும் அலையே
கரைதாண்டிய
உன் காதலால்
கரைசேர வழியில்லாமல்
தவிக்கிறேன் நான்.

பா.செல்வராணி, சங்கானை.

## எப்போது...?

சுனாமி அலையினால்
அள்ளுண்டு போன
அன்புறவுகளுக்கு
ஆராதனை செய்து
ஆவிகளுக்கு
ஆத்மா சாந்தி செய்யும்
அம்மாவே!
அன்புக்கோர் குழந்தை
அரவணைக்கத் தப்பினாலும்
அகதியான உன் மனம்
ஆறுவது எப்போது...?

ச. சிவரூபன்,
சுன்னாகம்.




## காதல் சாசனம்

சங்கில் நுழைந்து
சப்திக்கும் தென்றலைப் போல
உன் இளமையின் கவிதைகள்
என்னுள் பேசப்படுகின்றன

காதலியே! நம் காதல்
ஏடும் எழுத்தும் பாடும்
வெறும் வார்த்தைஜாலமாய் இல்லை
இதயம் மட்டும் அனுபவிக்கும்
இனம் புரியாத உணர்வு

தூசி படிவுறாத தூய கனவுகள் - என்
இரவுகளை அள்ளிச் செல்லும்...
நாம் சந்திக்காத நாட்களில்
உருக்குலைந்து போகும்
என் இதயம்!

நீ இல்லாத பொழுதுகள்
என் வாழ்வின் கறுப்பு ஜலைகள்!!



என்னவளே;
மழை என்பது
நருக்கு மரணம் இல்லை
மண்டும் ஒருநாள் முகிலாகி
மழையாய்த் தூறும்
அதுபோல
வானம் உள்ளவரை - இந்த(ப்)
பூமி உள்ளவரை
காற்றோடு இல்லறம் நடாத்தி
வாழ்ந்திருக்கும் நம் காதல்.

யோ. நித்தியா,
யாழ். பல்கலைக்கழகம்.

## எனக்குள் நீ



உன்னைக்
கண்ட நாள்
முதலாய்
எனக்குள்
ஏதோவோர்
மாற்றங்கள் ....
இவை அனைத்துக்கும்
நீ மௌனத்தையே
பரிசாய்த் தந்திட்டாய்
இதுதான் காதலா
கூறிவிடு பிளீஸ்....

தெ.திலீப்,
சித்தன்கேணி.

## புன்னகையில் பூத்த மலர்

கண்களால் கொள்ளையடித்து
என் மனதை
தொலைத்து விட்டேன்
உனக்குள்ளே!
உன்
மென்மையான புன்னகையில்
பூத்துக் குலுங்குது
உன் சிந்தனைச்
சிதறல்கள்...!



நீ
பார்க்கும்போது
உன் உதடுகள்
பேசாவிட்டாலும்
உன் கண்கள்
பேசுகின்றதே..!
என் செக்கச் சிவந்தவளே!
மனதுக்குள் பசுமை
நிறைந்த
இலக்கியத் தென்றலே
தேடுகின்றேன்
உன் வருகைக்காக
உன் சிவந்த பாதங்களை...!

## வசந்த உறவே காதல்

உன்னத உறவின் இணைப்பாய்
உயிர்களின் பரிவுத் துடிப்பாய்
இன்னிசை பாடல் மெட்டாய்
இதமாய்த் துடிப்பது காதல்!



நம்பிக்கை வேரின் பிடிப்பில்
நல்லதோர் உறவாய் ஆகி
தும்பிக்கை போன்று பலமாய்
துணையாய் இருப்பது காதல்!


அல்லவரும் நிலை மாறுமா...?

ந.வவா,
உடுவில்.

ஆறுவது எப்போது...?

ச.சிவரூபன்,
சுன்னாகம்.

# மௌனத்தின் தேடல்கள் - 48



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வு களை **மிகச் சிறிய** கவிதைகளாக்கித் **தபால் அட்டையில்** வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

**கிடைக்கவேண்டிய இறுதித் திகதி** - 20.02.2005


அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்- 48
**வலம்புரி - சங்குநாதம்**
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

நல்லதோர் உறவாய் ஆகி
தும்பிக்கை போன்று பலமாய்
துணையாய் இருப்பது காதல்!
மனங்களின் தெய்வீகப் பற்றில்
மாசுகள் அறவே அழித்து
இனமத வேறுபா டின்றி
இதமாய் இணைவது காதல்!
சின்னச் சின்ன பரிசில்
சிறப்புகள் நிறைவாய்ப் பெற்று
அன்பின் ஊற்றில் நனைந்து
ஆயுளை வளர்க்கும் காதல்!
வாழ்வின் பாதையை செதுக்கி
வண்ண நாள்களைப் பிறப்பிக்கும்
வசந்த உறவே காதல்
வாழ்த்துவோம் காதலர் தினத்தை!

வ.சிவாஜி, கரணவாய்.

இலக்கியத் தென்றலே
தேடுகின்றேன்
உன் வருகைக்காக
உன் சிவந்த பாதங்களை...!

வெண்ணிலவன்,
சுன்னாகம்.




தாஜ்மகால் - இது
காதலின் கோயில்!
வாழாத காதலுக்காய்
வாழ்ந்து கொண்டிருக்கிறது!
ஜாதி பேதம்
இன்றி யாவரும்
தரிசிக்கும் புனித ஸ்தலம்!
குருசு, குரான், கீதை
என்றில்லாமல் கூடி மகிழும்
புதிய உலகம் அது!
காதல் சின்னம் அதிசயமாய்
அங்கீகாரம் பெற்றாலும்
காதல் இன்னும்
அசிங்கப்பட்டுக் கொண்டுதான்
இருக்கிறது.

*S.அனுராஜ், வண்ணார்பண்ணை.*

## இதுவாயுன் மனசு

என் பிரியமான தோழியே!
உன்னை தினம் நினைச்சேன்
ஓடியகாலம் நினைவாச்சு
நட்பின் மகிமை புரியாமல்
ஒற்றுமை காண முடியாது
ஒரு தடவையா இரு தடவையா
ஓராயிரம் தடவை சொல்லியும்
ஏன் என் மனசை - உன்னாலே
ஒத்துக்கொள்ள முடியவில்லை...?

க.அயூரதி,
சங்கானை.

# அவசரகால சட்டத்தை அமுல்படுத்தினால்

# சிறுபான்மை சமூகத்துக்கு பெரும் ஆபத்து!

## பெ.சந்திரசேகரன் தெரிவிப்பு

(தலவாக்கலை)

அவசரகாலச் சட்டத்தினை அமுல்படுத்தினால் பெரும் பாதிப்புக்குள்ளாவது சிறுபான்மையின மக்களே என மலையக மக்கள் முன்னணியின தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அவசரகாலச் சட்டத்தினை எதிர்ப்பதிலும் அதற்கு ஆதரவாக நடத்தப்படும் வாக்கெடுப்பில் அதனை எதிர்த்து வாக்களிக்கவேண்டுமென்பதிலும மலையக மக்கள் முன்னணி உறுதியுடனும் தெளிவுடனும் இருக்கிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளரதும் போராளிகளினதும் மரணச்சடங்குகளில் கலந்து கொண்டதன காரணமாக என்னால்



இம்முறை இந்தச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்க முடியவில்லை.

இதேவேளை, மலையக மக்கள் முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினரான பி.இராதாகிருஷ்ணன் இந்தச சட்டத்தினை எதிர்த்து வாக்களித்தார் என்று தெரிவித்துள்ள முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன,

இந்தச் சட்டத்தினால் முழுக்க முழுக்கப் பாதிப்படையப்போபவர்கள சிறுபான்மை சமூக மக்களே என்றும அவர் சுட்டிக்காட்டினார். (க)

# எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அம்பாந்தோட்டைக்கு விஜயம்

(அம்பாந்தோட்டை)

எதிர்க்காட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு விஜயம் செய்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிககப்பட்ட மக்களை நேரடியாகச் சென்று சநதித்த எதிர்க்கட்சித் தலைவர், பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

தென்மாகாணத்தின் புனரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளில் அரச நிறுவனங்களைவிட உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் தொண்டர் அமைப்புக்களுமே பெருமளவில் ஈடுபட்டுவருவதாக எதிர்க்கட்சித் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் நேரடியாகச் சென்றடைய வேண்டும் என்பதில் தமது கட்சி உறுதியாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவருடன் ஐக்கிய தேசியக் கட்சியின் அமபாந்தோட்டைப் பகுதி பாராளுமன்ற உறுப்பினர் சஜீத் பிரேமசாசவும் சென்றிருந்தார். (க-9)

## வீதிக்களைப் புனரமைக்கும்

# கனரக வாகனங்களை கொரிய அரசு வழங்கியது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு கொரிய அரசாங்கம் தொடர்ந்தும் மனிதாபிமான முறையில் நிவாரண உதவிகளை வழங்கிவருகின்றது.

இதன் மற்றுமொறு கட்டமாக வீதி புனரமைப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான கனரக வாகனங்களை கொரிய அரசாங்கம் நேற்றுமுன் தினம் கொழும்பு துறைமுகத்தில் வைத்து இலங்கை அரசிடம் ஒப்படைத்தது.

கொரிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனங்கள் மற்றும் நிவாரணப் பொருட்களைக் கையளிக்கும் நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான கொரிய தூதுவர் ஜிம்ஸி கொங் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (க-9)

# புனானைப் படுகொலையைக் கண்டித்து

# வவுனியாவிலும் கண்டனப் பேரணி

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட முன்னாள அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப் கேணல் கௌசல்யன் உட்பட போராளிகள் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவில் நேற்றுமுன்தினம் கண்டனப் பேரணியொன்று நடாத்தப்பட்டுள்ளது.

தமிழீழ தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பேரணிக்குத தலைமை தாங்கினர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள்ளான ச.கனகரத்தினம் தலைமையில் பூந்தோட்டம் சந்தியிலிருந்தும், செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் குருமனகாட்டுச் சந்தியிலிருநதும், சிவசத்தி ஆனந்தன், வினோதரலிங்கம், சிவநாதன் கிஷோர் ஆகியோரின் தலைமையில் தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலிருந்தும் கண்டனப் பேரணிகள ஆரம்பமாகின. சுட்டுக்கொலலப்பட்ட கௌசலயன், பாராளுமனற உறுப்பினர் சந்திரநேரு மற்றும் போராளிகளின் படங்களைத் தாங்கிய ஊர்தியும் தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து புறப்பட்ட பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டது.

கண்டனப்பேரணியில் 'கைக்கும் காலுக்கும் விலங்கிடட நிலையில் தடுதது நிற்கின்றது ஒப்பந்தம்; ஏனெனில் நாங்கள் அதனை மதிக்கின்றோம்', 'சமாதானமா? போரா? விரைவில் முடிவெடு', 'வெண்புறாவை சிவப்பாக்காதீர்கள்' போன்ற பதாதைகள் எடுத்துச்செல்லப்பட்டன.

பொதுமக்கள், மாணவர்கள்,அரச ஊழியர்கள் எனப் பலரும் இக்கண்டனப் பேரணியில் கலந்துகொண்டனா. பேரணியில் கலந்துகொண்டோர் பிரபாகரனின் படத்தையும் புலிகளின் சின்னத்தையும் ஏந்திச்சென்றனர்.

பேரணியின் முடிவில் ஜனாதிபதிககான மகஜர் ஒன்றும் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. அதன பிரதி போர்நிறுத்தக் கண்காணிப்புக குழுவினரிடமும் கையளிக்கப்பட்டது. (ரு-8)

# தேசியத் தலைவரின் சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுத்தவர் கௌசல்யன்

## அரசண்ணா புகழாரம்

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணக்கருக்களுக்கும், சிந்தனைகளுக்கும் செயல்வடிவம் கொடுத்து தென தமிழீழத்தில் துடிப்புடன் செயற்பட்டவர் லெப்.கேணல் கௌசல்யன் என தூயவன் அரசறிவியல் கல்லூரியைச் சேர்ந்த அரசண்ணா தெரிவிததுள்ளார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் படுகொலை செய்யப்பட்ட லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு மாவீரர்களினதும் மற்றும் நாட்டுப்பற்றாளர் அரியநாயகம் சந்திரநேருவின் வணக்க நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை அரசு தமிழர்கள் மீது மீண்டும் ஒரு போரினைத் திணிப்பதறகு முழுமூச்சுடன் செயற்பட்டு வருகிறது. அதன் வெளிப்பாடாகவே கௌசல்யனின் படுகொலை அமைந்துள்ளது.

தமிழ்மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்த அரசும், அரசுடன் இணைந்து மறைமுகமாகச செயற்படும் தேசவிரோத சக்திகளும் முழுமூச்சுடன் செயற்படும் நிலையில் சகல தடைகளையும் எதிர்கொண்டு விடுதலைப் போராட்ட செயற்பாடுகளை தென்தமிழீழததில் முழுமூச்சுடன் முன்னெடுத்துச்சென்றவர் கௌசல்யன்.

சமாதான சூழலில் பெறுமதியான போராளிகளை இழந்திருப்பது விடுதலைக்காகப் போராடும் ஒரு இனத்திற்குப் பெரும் இழப்பாகவே உள்ளது. ஆழிப்பேரலை பேரனர்த்தம் நிகழ்ந்து சொற்பநாளில் தமிழினம் இனனொரு பாரிய இழப்பை எதிர்கொண்டுள்ளது. இழப்புக்களிலிருந்து மீண்டெழுந்து விடுதலைப்பாதையில் பயணிப்பதே தமிழ்மக்களின் இன்றைய பணியாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ அரசியல்துறை மகளிர் துணைப் பொறுப்பாளர் தமிழவிழி தனது உரையில்,

போர் நடைபெற்ற காலங்களைப் போல் சமாதானச் சூழலிலும் தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழ்மக்களும் உயிரிழப்புக்களைச் சந்தித்துள்ளனர். சமாதான் சூழல் எதிரிக்குப் படுகொலைகளுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுமை என்பது சமாதானத்தின் மீதான அர்ப்பணிப்புடனான செயற்பாடுகளை வெளிப்படுத்தி நிற்கிறது எனக் குறிப்பிட்டார். (ரு-4)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால்**

**யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்**
**அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான**
**பிறிமா கிறீன் மா கேள்விகோரல்**
**சனவரி, பெப்ரவரி, மார்ச்—2005**

1) யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு மாதமொன்றிற்கு 1000Mt படி 3000Mt பிறிமா கிறீன் மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| விநியோகிக்கவேண்டிய தொகை | அளவு |
|---|---|
| 2005 சனவரி | 1000Mt |
| 2005 பெப்ரவரி | 1000Mt |
| 2005 மார்ச் | 1000Mt |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2005.02.14ஆம் திகதி தொடக்கம் 2005.02.25ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

2) கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள்முறி - **Bid Bond**) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01 Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும் (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).

3) பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமோ யாழ் செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2005.02.28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும்.

அன்றைய தினம் பி.ப. 2.30மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

4) நீள தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி'' என எழுதப்படவேண்டும்.

5) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயலபடுத்தல் முறிக்காக- **PERFORMANCE BOND**) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும் (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).

6) கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் தை மாதத்திற்கு 30 நாட்கள் வலுவுடையதாக இருக்கும்.

**க.கணேஷ்,**
**தலைவர் /அரச அதிபர்**
**மாவட்ட கேள்விச்சபை / மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**13.02.2005**

(C-1083)

# ஈராக்கில் பல்வேறு குண்டுத்தாக்குதல்கள் 3நாட்களில் 68பேர் பலி;36 பேர் படுகாயம்

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத் தின பலவேறு பகுதிகளிலும் கடநத மூன்று நாட்களாக இடம்பெற்ற குணடுத்தாககுதல்களில் 68பேர் வரை பலியாகியுள்ளதுடன், 36 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஈராக் தலைநகர் பக்தாத் அருகே கடந்த சனிக்கிழமை, கார்க்குண்டு வெடித்ததில் 17 பேர் இறநதனர். 16போ படுகாயமடைந் தனர்.

பக்தாத் நகாின தெற்கே 100 கி.மீ தொலைவில் முசாயீப் என்ற இடத்தில் மருத்துவமனை மற்றும் உள்ளாட்சி மன்ற அலு வலகம அருகே இநதக் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது.

ஈராக்கில் அமெரிக்க பாது காப்புததுறை அமைச்சா டொனா ல்டு ரம்ஸ்பீல்டு ரகசியப் பய ணம் மேற்கொண்ட நிலையில் தீவிரவாதிகள் தலைநகர் பக் தாத்தில இரு இடங்களில் கடந் வெள்ளிக்கிழமை தாககுதல் நடத் தினர். இதில் 20க்கும் மேற் பட்டோர் இறந்ததுடன் சுமார் 15 பேர்வரை படுகாயமடைந்துள்ள னர்.

இதுதவிர, பக்தாத்தின் வட கிழக்கே 70கி.மீ தொலைவில் உள்ள பலாத்ருஸ் அருகேயுள்ள மசூதியல் நடந்த தாக்குதலில் 12பேர் இறந்தனர். 5பேர் படுகாய மடைநதனர். தொழுகை முடிந்து மககள் வெளியே வந்துகொண்டி ருந்தபோது மசூதிக்கு வெளியே காய்கறி லொரியில வைக்கபபட் டிருந்த குண்டுகள் வெடித்தன.

மேலும் பேக்காிக்கடை மீதான தாக்குதல் சம்பவம் புது பக்தாத் பகுதியில் நடந்தது. காாகளில் ஆயுதங்களுடன் வந்த தீவிரவாதிகள், அந்தக் கடை க்கு எதிராகச் சாலையை மறித்த படி வாகனங்களைக் குறுக்கே நிறுத்தினா. பின்னர் கடைக்குள புகுந்து அதன் ஊழியர்கள் மீது சரமாரியாகச் சுட்டனர். இதில் 11பேர் இறந்தனர்.

ஈராக்கின் வட பகுதி நக ரில் சாலையோரத்தில் வைக்கப் பட்டிருந்த குண்டு வெடித்ததில் அவ்வழியாகச் சென்ற 2 பேர் இற ந்தனர். டால்அபார் நகரில் இந் தச் சம்பவம நேற்றுமுன்தினம நடந்தது.

இது இவ்வாறிருக்க, மோசுல் நகர நெடுஞ்சாலையில் 6 வீரர் களின் சடலங்கள் நேற்றுமுன் தினம் கிடந்தன. இவர்கள் தேசிய பாதுகாவல் படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள். மார்பு, தலைப் பகுதிகளில் இவர்கள் சுடப்பட்டி ருந்ததாகப் பொலிஸார் தெரி வித்தனர். (ற)



பனிக்காலம் முடிகிறது என்ற மகிழ்வில் உறங்கேரியில் ஆட்டுத்தோல் போர்வை போர்த்தியவாறு நடனமாடிய மக்களைப் படத்தில் காணலாம்.

# இராணுவத் தளபதி பதவியை முஷாரப் துறக்கவேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து

(வோஷிங்டன்)


பாகிஸ்தான் அதிபா பர்வேஷ முஷாரப், தான்வகிக்கும் இராணு வத் தளபதி பதவியை துறக்க வேண்டும எனறு அமெரிககா கருத் துத் தெரிவித்துள்ளது.



ஏற்கனவே அறிவித்த வாக் குறுதியின்படி, கடந்த ஆண்டு இறுதியளவிலேயே இராணுவ தள பதி பதவியை அவர் துறந்திருக்க வேண்டும். ஆனால், தனது வாக் குறுதியிலிருந்து பின்வாங்கினார் முஷாரப்.

இதுபற்றி பொதுநலவாய நாடு களின் அமைச்சர்கள் அவரைக் கண்டித்துக் கருத்துவெளியிட்டி ருநதனர். இதற்குப் பதிலளிக்கும வகையில் கடந்த வெளளிககிழமை பேசிய அமெரிக்க வெளியுறவுத் துறை அதிகாரி ரிச்சர்ட் பௌச்சர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித தார்

அவர் மேலும் கூறியதாவது, முழுமையாகச் செயல்படக் கூடிய ஸதிரமான ஜனநாயகத்துக்கு மாறும் நடவடிக்கைகளை மேற் கொள்வது பாகிஸ்தான் நலனுக்கு நல்லது. இந்த இலட்சியத்தை அடையும் நடவடிக்கைகள் தொட



ரும் என்று எதிர்பார்க்கிறோம்.

இந்த இலட்சியததை அடைந் தால் மட்டுமே நவீன தேசமாக பாகிஸ்தான் வடிவெடுக்க முடியும்.

2007க்குள் அந்நாடு தேர் தலை முடித்துவிட வேண்டும் என் பதே அமெரிக்காவின் எதிர்பார்ப்பு. நீதித்துறை, நாடாளுமன்ற அமைப் புகளை அந்நாடு வலிவுபடுத்தும் எனறு நம்புகிறோம் என்றார் பௌச் சர். (ற)

# 2 – ஆம் கட்ட சட்டசபைத் தேர்தல் நாளை பீகாரில் நடைபெறும்

## சோனியா தீவிர பிரசாரம்





(பீகார்)

பீகார் மாநிலத்தில் இரண் டாவது கட்டச் சட்டசபைத் தேர் தல் நாளை நடைபெறவுள்ளது. இதையொட்டி காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி பகார் மாநிலம் கதிஹாா் மாவட்டம் கோ ஹாவில் தேர்தல் பிரசார பேர ணியை தொடங்கி வைத்துப் பேசி னார். அவர் அங்கு பேசுகையில்,

பீகார் மாநிலம் முன்னேறா மல் பின்தங்கி இருப்பதற்கு இந்த மாநிலத்தை ஆட்சிசெய்த ராஷ டிரீய ஜனதா தளம் கட்சிதான் காரணம். இந்த மாநிலத்தை முன னேற்ற வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பீகார் மாநிலத் தின் தற்போதைய சூழ்நிலையை மாற்றி அமைக்க காங்கிரஸ் கட்சி முழுக் கவனத்தையும் செலுத்தும்.

பீகார் மாநிலத்தின் ஒளிம யமான எதிர்காலத்தை உருவா க்க, வாக்காளர்கள் அனைவரும் காங்கிரஸ் கட்சிக்கு வாக்குக ளைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பீகார் மா நிலத்தில் காங்கிரஸ் ஆட்சி அமைத்ததும இங்கு சட்டம் - ஒழுஙகை நிலைநாட்ட அதிக முக்கியத்துவம் கொடுப்போம்.

பீகார் மாநிலத்தில் சட் டம் - ஒழுங்குநிலை கவலை அளிப்பதாக இருக்கிறது. குற்ற ங்களும், வன்முறைகளும் அதி கரித்து வருகின்றன. அன்பும், அமைதியும் நிறைந்திருநத பீகார் மாநிலததில் தற்போது வன் முறைகளும், குற்றங்களும் அதி கரித்துவரும் தகவல்கள் கவலை தரக்கூடியதாக இருக்கிறது.

இதுபோன்று சூழ்நிலைக ளால் பல கேள்விகள் எழுகின் றன. பீகார் மாநில மக்கள் எந் தளவு கஷ்டப்படுகிறார்கள் என பதையே இது காட்டுகிறது. இது போன்ற சூழ்நிலை உருவாக அடிப்படைக் காரணம் அரசியல் தான்.

ஆட்சியையும், அதிகாரத் தையும் கருவியாகப் பயன்படு த்தி இதுபோன்ற சமூக விரோத செயல்களில் ஆளும் கட்சிய னர் ஈடுபடுகிறார்கள். இந்த நிலை மாற காங்கிரஸ் கட்சிக்கு வாக் குகளைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆட்சியில் இருப்பர்கள் மக் களை மறந்துவிடடார்கள் எனவே, இங்கு ஒரு அமைதியான சூழ் நிலையை ஏற்படுத்த காங்கிரஸ் கட்சி விரும்புகிறது.

பீகார் மாநிலத்தில் உள்ள வறுமையை ஒழிக்க காங்கிரஸ் கட்சி தீவிரமான நடவடிக்கை எடுககும். அதேநேரத்தில வேலை வாய்பபை அதிகாிக்கவும் முயற்சி செய்வோம். மதம் சம்பந்தப் பட்ட சிக்கலில் இங்குள்ள மக் கள் சிக்கி இருக்கும் நிலை பற்றி கேள்விப் பட்டேன்.

குஜராத்தைப் போன்ற ஒரு சூழ்நிலை பீகார் மாநிலத்தி லும் உருவாகக் கூடாது என்று நான எச்சரிக்கிறேன்.

பீகார் மாநிலத்தில் அதிக தொழிற்சாலைகள் உருவாகவும, அதன்மூலம் வேலைவாய்ப்புகள அதிகரிக்கும் நிலை ஏற்படும் சூழ் நிலையை காங்கிரஸ் கட்சி உரு வாக்கும்.

பீகார் மாநிலத்தில் பொரு ளாதாரத்தை முன்னேற்றவும், சமூக நீதியை நிலைநாட்டவும் விரைவாக நடவடிக்கை எடுக்கப் படும். வாழை மற்றும் கம்பளி விவசாயிகளின் பிரச்சினையை தீர்க்க காங்கிரஸ் கட்சி தீவிர நடவடிக்கை எடுக்கும் என்றார். (ற)

# நேபாளத்தில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்த இந்தியா – அமெரிக்கா – பிரிட்டன் தீவிர முயற்சி

(காத்மண்டு)

நேபாளத்தில் மீண்டும் ஜன நாயக ஆட்சி ஏற்படுத்தும் தீவிர முயற்சியில் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் இணை ந்து செயல்படுகினறன.

ஜனநாயகப் பாதைக்கு விரைவில் திரும்பவில்லை என றால், நேபாளத்துக்கு அளிக்கப படும் உதவிகள் அனைத்தும் இரதது்செயயப்படும் என்று அமெ ரிக்கா எச்சரித்துள்ளது.

நேபாளத்தில் பிரதமர் ஷெர் பகதூர் தலைமையிலான அரசை மன்னர் ஞானேந்திரா கடந்த முதலாம் திகதியன்று கலைப் புச்செய்தார். ஆட்சிப் பொறுப் பைத் தானே ஏற்றது மட்டு மன்றி இராணுவத்தின் பாதுகாப பிலும் நாட்டை வைத்துள்ளார். அவசரநிலை பிரகடனம் செய்யப பட்டுள்ளது. ஞானேந்திராவின் இந்த நடவடிக்கையை உலக நாடுகள் சற்றும் எதிர்பார்க்க வில்லை.

ஞானேந்திராவின நடவடிக்கை யால், வங்கதேசத்தில் நடக்க இருந்த சார்க் மாநாட்டில் இந் தியப் பிரதமர் மன்மோகன் சிங பங்கேற்கவில்லை. மேலும் நேபா ளத்தில் மீண்டும் ஜனநாயகம் மலாவதறகான நடவடிககையில் தீவிரம் காட்டுகிறார். இந்த விஷ யத்தில், இந்தியா- அமெரிக்கா- பிரிட்டன் ஆகியவை இணை ந்து செயல்படுகின்றன. இந்நாடு களைச சோநத தூதாகள் தொலைபேசி மூலம் இதுதொட ர்பாக அடிக்கடி ஆலோசனை நடத்துகின்றனர்.

நேபாளத்தின் வளர்ச்சிக்கு இந்நாடுகள் பலவகையில் நிதி யுதவி செய்துவருகின்றன. ஜன நாயக ஆட்சி தூக்கியெறியப் பட்ட காரணததால், உதவிகளை நிறுத்துவது பற்றி மூன்று நாடுகளும் யோசித்துவருகின் றன.

காத்மண்டுவில் நேற்று முன் தினம் விழா ஒன்று நடந்தது. அதில், நேபாள்த்துக்கான அமெ ரிககத் தூதுவர் ஜேம்ஸ் எப் மொரி யார்டி கலந்துகொண் டார். அவர் பேசுகையில்,

ஜனநாயகப் பாதைக்கு நேபாளம் உடனடியாகத் திரும்ப வேணடும. இலலையெனறால் அநநாடடுக்கு அமெரிக்கா அளி த்துவரும் உதவிகளை நிறுத் தக்கூடிய சூழ்நிலை உருவா கும். உதவியை நிறுத்தும்படி எங்கள் நாட்டுக்கு நிர்ப்பந்தம் அதிகரித்துள்ளது. இது மேலும் அதிகரிக்குமே தவிர, குறையாது.

எனவே, விரைவில் ஜன நாயகத்தை ஏற்படுத்த மன்னர் ஞானேந்திரா முயற்சிப்பார் என்று நம்புகிறோம்.

அவர் ஏற்கனவே அறிவித தபடி, கைதுசெய்யப்பட்டுள்ள அரசியல் தலைவர்கள் அனை வரையும் நூறு நாட்களுக்குள் விடுதலை செய்யவேண்டும். அர சியல் கட்சிகள் சுதந்திராக செயல் பட அனுமதிக்கவேண்டும் என்றார். (ற)

## WORLD NEWS உலக தரிசனம்



சுனாமி அலை வரும் எப்படியோ அதுபோல் மண் புயல் வீசும் போதும் பாரிய மண் அலைகள் உருவாகும் என்பதைச் சித்தரிக்கும் புகைப்படம்.

# வயிற்றின் உறுப்புக்கள் வெளியே தள்ளப்பட்ட நிலையில் குழந்தை

(கொழும்பு)

வயிற்றின் உறுப்புக்கள் வெளியே தள்ளப்பட்ட நிலையில் பிறந்த 9 மாதக் குழந்தை ஒன்றுக்கு ழுழுமையான சிகிச்சை அளிக்கும் பொறுப்பினை சவுதிஅரேபிய அரசாங்கம் ஏற்றுள்ளது.

சவுதிஅரேபியாவில் உள்ள மிகச் சிறந்த மருத்துவமனையில் இக் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்படவுள்ளது.

இக்குழந்தையின் தாய், தந்தையாருக்கு இலங்கைக்கான சவுதிஅரேபியாவின் தூதுவர் முஹம்மது மாற்மூத் அல்கரி விமானப் பயணச்சீட்டுக்களை வழங்கினார்.

அத்துடன், இக் குழந்தையின் வைத்திய செலவுக்கு எத்தகைய தொகை செலவானாலும் அதனை சவுதி அரசாங்கம் பொறுப்பேற்கும் என்றும் இலங்கைக்கான சவுதிஅரேபியாவின் தூதுவர் தெரிவித்துள்ளார். (க)

# நிவாரணங்கள் குறித்து ஆய்வு நடத்த நடவடிக்கை

(கொழும்பு)

கடற் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணங்கள் குறித்து ஆய்வு நடத்த சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நிவாரண உதவிகள் தமக்கு கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள்,அவற்றை விநியோகிப்பதில் அதிகாரிகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் என்பவற்றைக் கண்டறிவதே இந்த ஆய்வுகளின் நோக்கமாகும்.

இந்த ஆய்வு நடவடிக்கை நாளை ஆரம்பிக்கப்படும் என்று சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் சீத்தா ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமூகத்தின் உயர் பதவிகளில் இருக்கின்ற அதிகாரிகள் நிவாரண ஊழியர்கள் உட்பட சமூக சேவைகள் அமைச்சின் அதிகாரி களும் இணைந்து இந்த ஆய்வுகளை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இதேவேளை,நிவாரணப் பொருட்களாக இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள காலாவதியான உணவுப் பொருட்கள் அனைத்தையும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

பால்மா, குடிநீர் போன்ற பல்வேறு நிவாரணப் பொருட்கள் பாவனைக்கு உதவாத வகையில் காணப்படுவதாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (க-9)

# பாதிப்புற்றவர்கள் 50,000ரூபா வட்டியில்லா கடனைப் பெறலாம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் வீடுகள் சேதமடையாமல் தமது அத்தியாவசியப் பொருட்களை இழந்துள்ள அரசாங்க ஊழியர்கள் அப்பொருட்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கென 50 ஆயிரம் ரூபா வட்டியில்லாக் கடனைப் பெற முடியுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

60 சமமான மாதாந்தத் தவணைக் கட்டணங்களாக ஊழியரது சம்பளத்திலிருந்து இக் கடன் மீள அறவிடப்படவுள்ளது.

கடன் பெற்றுக்கொள்ளும் ஊழியரது ஓய்வூதியத்திற்கு முன்பு மொத்தக் கடன் தொகையையும் பெற்றுக்கொள்ள முடியாத விடத்து ஓய்வூதியக் கொடுப்பனவிலிருந்து இக்கடன் தவணைக்கட்டணமாக அறவிடப்படும்.

இவ்விசேட கடன் கொடுப்பனவு எதிர் வரும் யூன் மாதம் 30 ஆம் திகதிவரை வழங்கபபடவுள்ளதுடன் அதற்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

(க-9)

# சுட்ட மாமிசத்தால் புற்று நோய் பரவும்?

(நியூயோர்க்)

அமெரிக்காவில் உள்ள தேசிய சுற்றுச்சூழல் ஆரோக்கிய அறிவியல் மையம் அண்மையில் புற்றுநோய் தாக்குதலுக்குக் காரணமான பொருட்கள் பற்றிய பட்டியலை வெளியிட்டுள்ளது.

இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் இந்தப் பட்டியலில் புதிதாக சுட்ட மாமிசம் சேர்க்கப்பட்டுள்ளது.

கிரில் அடுப்பில் எரியும் தீயில் மாமிசத்தை நேரடியாக வறுத்து சாப்பிடுவது புற்றுநோயை வரவழைக்கும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மாமிசத்தில் வைரஸ் கிருமிகள், அணுக்கதிர்கள், கூட்டுக்கலவை ஆகியவை இடம்பெற்றுள்ளன.

ஜவுளித் துறையில் பயன்படுத்தப்படும் சாயங்கள், பெயிண்ட், மை போன்றவற்றில் காணப்படும் இரசாயனங்களும் புற்றுநோயை உண்டாக்கும் பொருட்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. (க-9)

# மயான பூமியில் விசமிகளின் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது குடாநாட்டு மக்களிடையே சமூக நல்லுணர்வு வெகுவாகக் குறைந்து வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் நாட்டப்படும் அடையாளக் கம்பங்களைப் பிடுங்குதல், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல் ஆகியன இன்று சர்வசாதாரண சம்பவங்களாகிவிட்டன.

குறிப்பாக, செம்மணி இந்து மயானத்தில் பொதுமக்களின் நிதியுதவியுடன் கிணற்றில் நீர் அள்ளப் பயன்படுத்தப்பட்ட கொங்கிறீற் தூண் விசமிகளால் வளைத்து முறிக்கப்பட்டிருக்கிறது.

மயானத்துக்கு இறுதிக்கடன் செலுத்த வருபவர்களுக்கு நீர் அள்ள உதவியாக இருந்த இந்தத் தூண் வளைத்து முறிக்கப்புட்டதால் பல சிரமங்களை எதிர்கொள்ள வேணடியிருக்கிறது.

இதே மயானத்துக்கு போடப்பட்டிருந்த இரும்புக கேற்றுக்கள் திருடப்பட்டதும், மழை காலங்களில் எரியூட்டலுக்காக அமைக்கப்பட்டிருந்த கொட்டகைகளின் கூரைத்தகடுகள் அகற்றப்பட்டதும் இத்தகைய சமூக உணர்வற்ற விசமிகளின் கைங்கரியமே என விச்னம் தெரிவிக்கப்படுகிறது. (து)

# காதலர் தின சிறப்புக் கவிதைகள்

## பூ மனசு மட்டும்



பொத்தி வைத்து தந்த
ஒற்றை ரோஜாவைப் பார்த்தாயா...?
அழகாய் சிவந்து புன்னகைக்கிறதே...
உன் அழகிய முகத்தைப் போலவே...

மலர்ந்த ரோஜாவைப் போலவே
மலர்ந்திட்ட நம் உறவும்
முகர்ந்து கைகளில் அள்ளிக்கொள்
முகம் மலர்ந்து சிரிக்கும்....!

கசக்கி தூர வீசி விடு...
வாடி சருகாய்ப் போகும்....!
இரண்டையும் செய்ய
உனக்கு உரிமை தந்தேன்....!

ஏது வேண்டுமானாலும் செய்....
அன்பே... உன் பூ மனசு மட்டும்
வாடிப் போகாமல்....!

ஜே.ஜொய்ஸி
குருநகா.

## காதலர்கள் களிக்கட்டும்!

கட்டழகு மொட்டாகி
கலையைக் காட்டும்
காதலின்பம் காமத்தைக்
கரைத்து ஊட்டும்
விட்டென்றும் விலகாத
வினையைக் கூட்டும்
வீசுகின்ற தென்றலதாய்
விழவை மீட்டும்!

வாட்டமெலாம் வையத்தை
விட்டே ஓட்டும்
வருங்கால எண்ணங்கள்
மனதை யாட்டும்
பாட்டெழுதி அவள் கையில்
கொடுக்க நீட்டும்
பருவ எழில் பைங்கொடியின்
வனப்புக் காட்டும்!
காதலெனும் வயலினிலே
களையை நீக்கி (க்)
கருத்துடனே யதன்பயனை
களித்துக் கொள்ள
மோதல்தமை முழுமனதாய்
முளையில் கிள்ளி
முறுவலித்துக் காதலிலே
முனைப்புக் கொள்வீர்!

கூத்தாடி
வி.சி.குஞ்சிதபாதம்

## உறவுகளாவது எப்போது?

காதல்
சுகத்தில் ரணமானது
வலியில் சுகமானது

நாலிரண்டு வருடமாய்
மனதில் சுகமாய்
சுகத்தில் ரணமாய்
ரணத்தில் சுகமாய்—காதல்

இருமனம் கலந்திட்ட— நாம்
உறவுகள் வாழ்த்திட
உறவுகளாவது எப்போது?

சுகமான வலியுடன்
காத்திருக்கிறேன் உனக்காக

கவிநிலா
யாழ்ப்பாணம்.

# அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகள் தொடருமானால் மீண்டுமோர் யுத்தம் உருவாவதை தவிர்க்கமுடியாது

## –வடமராட்சி மாணவர் அமைப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவடட அரசியல்துறைப் பொறுப்பாளா லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் அம்பாறை மாவட்ட தமிழா் விடுதலைக்கூட்டணியின முன்னாள நாடாளுமன்ற உறுப்பினா் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான புனானைப் பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டமை தமிழ் மக்கள் மத்தியில் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு வடமராட்சி மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து அவ் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,

யுத்த நிறுத்த உடன்பாடு அமுலில் இருக்கையில் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் ஆயுதங்கள எதுவுமின்றி நிராயுதபாணிகளாகப் பிரவேசித்த போராளிகள் மீது மிலேச்சததனமான முறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் கண்டிக்கத்தக்க செயலாகும். இதுசமாதானமுயற்சியிலஓா் எதிா் விளைவான தாக்குதலை ஏற்படுத்தவே செய்யும்.

ஆழிப் பேரலை அனா்த்தத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை பெறறுக்கொடுப்பது தொடா்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்துடன் கலந்தாலோசித்துவிட்டு கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்புக்குச சென்று கொண்டிருந்த சமயம் வெலிகந்தவுக்கு அருகில் புனானைப் பகுதியில வைத்து மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளரான கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மீதும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் எமது தமிழா தாயகப் பிரதேசங்களை சீகுலைககின்ற ஒரு நடவடிக்கையாகவே நாம் கருதுகின்றோம.

தமிழீழ விடுதலைப்புலிகளின ஆயுத பலத்துக்கு முகங்கொடுகக முடியாத அரசும் இராணுவமும் யுத்தநிறுத்த உடன்பாடு அமுலில இருக்கையில, விடுதலைப் புலிகளையும் தமிழ்த் தேசியப் பறறாளா்களையும் அழிப்பதற்கு பல வழிகளில் முயன்று வருவது உண்மையே. இந்தச் செயற்பாட்டுக்கு ஆடுகளமாக மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்தை அரசும் இராணுவமும் பயன்படுத்துகின்றது. ஸ்ரீலங்கா இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் துணைப்படைகள் தேசவிரோதக் குழுக்களைப் பயன்படுத்தி அல்லது அவற்றின் பெயரைப் பயன்படுத்தி அரச படைகளே இந்தப் படுபாதகச் செயலைப் புரிந்திருககிறாா்கள். இச்சம்பவங்கள் தொடா்பாக ஒன்றும் செய்ய முடியாது என அரசுப படைகள் கைவிச்குமானால் விளையும் விபரீதங்களை அரசும், படைகளும் சந்திககவேண்டி ஏற்படக்கூடும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இத்தகைய குளறுபடித்தனங்களுக்கு இடமளித்து, காய் நகர்த்தல்களில் அரசுத்தரப்போ, படைகளோ தொடா்ந்து ஈடுபடுமானால் தமிழா்கள் மீண்டும் யுத்தத்தை எதிா்கொள்ளத் தயாரகவே இருக்கின்றனா் என்பதை தெட்டத்தெளிவாகத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மககளுக்கு தங்களது சேவையை வழங்கச்சென்று கொண்டிருந்த வேளை இராணுவத்தின் திட்டமிட்ட சதிக்குள் சிக்கி தாயகக் கனவுடன் வீரச்சாவினைத் தழுவிய லெப்.கேணல் கௌசல்யன், மேஜா் புகழன், மேஜா செந்தமிழன், 2ஆம் லெப்ரினனட் விதிமாறன் ஆகிய நான்கு மாவீராகளுக்கும் நாட்டுப்பறறாளா் அரியநாயகம் சந்திரநேரு அவா்களுக்கும் எமது கண்ணீா் வணக்கத்தை தெரிவித்துக்கொள்வதுடன் நாட்டுப் பற்றாளர் சந்திரநேரு அவர்களின் குடும்பததினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-43)

## கலந்துரையாடல்

தென்மராட்சி அபிவிருத்தி திட்டம் தொடா்பாக ஜி.ரி.இசற் நிறுவனம் இன்று மு.ப.10.00 மணிக்கு கலந்துரையாடல் ஒன்றை நடாத்தவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் இக்கலந்துரையாடலுக்கு தலைமைதாங்கவுள்ளாா். (க-36)

## மாசிமக இலட்சார்ச்சனை

தெலலிப்பழை துா்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீதுா்க்காதேவி தேவஸ்தான மாசிமக இலட்சாா்ச்சனை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடா்ந்து பத்துதினங்கள நடைபெறவுள்ளது. 24ஆம் திகதி வியாழக்கிழமை மாசிமகப் பெருவிழா இடம்பெறவுள்ளது.(க-9)

## வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு தொலைபேசி இணைப்பு வழங்குக!

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு ரெலிக்கொம், நிறுவனம் தொலைபேசி இணைப்புக்களை வழங்க முன் வரவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியை நவீன வசதிகளுடன் கூடிய நகரமாக மாற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியின் பிரதான நகர மையம் மருதங்கேணியில் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிர்வாக மட்டத்தில் உள்ள அதிகாரிகளின் கூடுதல் பங்களிப்பின் மூலமே இந்த நவீன நகரம் நிர்மாணிக்கப்படுவது சாத்தியமாகுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-43)

## பெண்களுக்கு பாகுபாடு காண்பிக்கும் சட்டங்களை நீக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

பெண்களுக்கு பாகுபாடு காண்பிக்கும்வகையில் அமைந்த சட்டங்களை சட்ட சாசனத்தில் இருந்து நீக்கிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மகளிருக்கு உரிய இடம் அளிப்பதற்கு என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கைக்கு அமைவாகவே இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் மங்கள சமரவீர,

1935ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட காணி அபிவிருத்தி சடடத்தில் திருத்தங்கள் கொண்டு வருவதற்கும் அமைச்சரவை தா்மானித்துள்ளதாக கூறினாா்.

இதற்கமைய ஒருதரப்பினரிடம் இருந்து மற்றொரு தரபபினருக்கு காணி கையளிக்கும்போது பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் சட்ட திருத்தம் மேற்கொளளப்படும் எனத் தெரிவித்தார். (க-60)

## ஒருநாள் கிரிக்கெற் போட்டிகளை சுவாரஸ்யமானதாக்க மாற்றங்கள்

கிரிக்கெற் விளையாடும் நாடுகள் குறைவானாலும் கிரிக்கெற் ரசிகர்கள் உள்ள நாடுகளின் எண்ணிக்கை அதிகமாகும. அத்தகைய கிரிக்கெற் விளையாட்டு தற்போது பல சுவாரஸ்யமான மாற்றங்களை எதிர்கொள்ளவுள்ளது.

டெஸ்ட் போட்டிகளைவிட ஒருநாள் போட்டிகளுக்கு ரசிகர்களிடையே வரவேற்பு அதிகம் அவற்றை மேலும் விறுவிறுப்பானதாக மாற்றும் வகையில் மாற்றங்கள் செய்யப்பட வேணடுமென ஐ.சி.சியின் ஆலோசனைக்குழுத் தலைவரும் இந்திய அணியின் முன்னாள் தலைவருமான சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெறும் ஒருநாள் போட்டிகளில் நடைபெறும் போதே முடிவு என்னவென்று தெரிந்துவிடக் கூடியதாக உள்ளது. ஆடடத்தின் கடைசி ஓவா் வரை முடிவு தீா்மானிக்க முடியாததாக இருக்கும்போதே போட்டி சுவாரஸ்யமாக இருக்கும் என கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் கிரிக்கெற்றின் நுணுக்கத்தை காணலாம். ஆனால் போட்டியை ரசிக்க வேண்டுமானால் ஒருநாள் போட்டிகளையே காணவேண்டும்.

தறபோதுள்ள முதல் 15ஓவா்களுக்குள்ள களத்தடுப்புக் கட்டுப்பாடு அதிரடி துடுப்பாடட வீரா்களுக்கு சாதகமானதாகவே உள்ளது. இக்கட்டுப்பாட்டை சுழற்சி முறையில் கொண்டு வரவேண்டுமென கவாஸ்கர் கூறியுள்ளார்.

அதனை துடுப்பெடுத்தாடும் அணிகளே நிர்ணயிக்க வேண்டும். இதனால் போட்டி பரபரப்பாக அமையும் வீரர்களும் கடைசி வரை வெற்றியை தமதாக்கிக் கொள்ளும் நோக்கில் விளையாடுவர்.

தற்போது புதிதாக '20:20' என்ற முறை இங்கிலாந்து, தெனனாபிரிக்கா, நியூஷிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் நடைமுறையிலுள்ளது அதாவது இரு அணிகளும் தலா 20 ஓவர்கள் விளையாடும்.

இதுபோன்ற மாற்றங்களால் ஒருநாள் போட்டிகள் மேலும் விறுவிறுப்பானதாக அமையுமென கிரிக்கெற் அபிமானிகள் எதிர்பார்க்கின்றனர். (ற-7)

## ஹைதரபாத் ஓபன் டெனிஸில் சானியாவுக்கு சம்பியன்பட்டம்

இந்தியாவின் ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் நடந்து முடிநத ஹைதராபாத் ஓபன் டெனிஸ்




தொடரின் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இந்திய டெனிஸ் நட்சத்திரம் சானியா மிர்சா யாரும் எதிா்பாராத வகையில் வெற்றி பெற்றுளளாா்.

18வயது நிரம்பிய சானியா உக்ரேன் வீராங்கனை அல்யோனாலை எதிர்த்து விளையாடினாா். 6:4,5:7,6:3என்ற செற்கணககில் அவர் வெற்றிபெற்றார்.

இவ் வெற்றிமூலம் டபிள்யூ டி.ஏ டெனிஸ் தொடரில் சம்பியன் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

உலக டென்னிஸ்தர வரிசையில் 132ஆவது இடத்திலுள்ள சானியா இச் சாதனையை ஏற்படுத்தியதற்கு ஆந்திர முதலவா் ராஜசேகரரெட்டி பிரதமா் மன்மோகன்சிங, சோனியாகாந்தி உட்பட பலரும தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தொிவித்துள்ளனா். அவருக்குப் பரிசாக 10இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

முன்னதாக் அரையிறுதிப் போட்டியில் 6:4,7:6என்ற செற்கணக்கில் ரஷ்யாவின் மரியா கிரிலென்கோவை வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இதேவேளை, இத் தொடரின் இரட்டையர் இறுதிப் போட்டியில் மோதிய இரு அணியும் சீன வீராங்களைகளே ஜியான் ஜீயாங் ஜோடி டிங்லீ, டியான் சன் ஜோடியை 6:4,6:1என்ற நேர் செற்கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை தமதாக்கிக்கொண்டது. (ற-7)

## திறமையான வேகப்பந்து வீச்சே பாகிஸ்தானுக்கு கைகொடுக்கும்

இந்திய அணியை வீழ்த்த பாகிஸ்தானுக்கு உள்ள ஒரே வழி வேகப்பந்து வீச்சுத்தான் என்கிறார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும் வேகப்பந்து வீச்சாளருமான இம்ரான்கான்.

எதிர்வரும் 25ஆம் திகதி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணியின் கிரிக்கெற் தொடர் பற்றி கருத்துத் தெரிவித்த அவர்,

இநதிய வீரர்கள் சுழற்பந்து வீச்சில் அபாரமாக ஆடக்கூடியவர்கள். உலகின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோன்கூட இந்தியச் சுற்றுப் பயணத்தில் பிரகாசிக்கவில்லை. ஆனால், வேகப்பந்து வீச்சில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் திணறுவார்கள்.

பாகிஸ்தான் அணியில் வேகப்பந்து வீச்சாளா்கள் பலா் இருப்பதால வேகப்பந்து வீச்சையே அது அதிகம் நம்பியுள்ளது. அதனைச் சரியாகப் பயனபடுத்தினால் தொடரில் வெற்றி பெறலாம்.



தற்போது பாகிஸ்தான் அணியில் சொகைப் அக்தர், முகமட் சமி இருவரும் அனுபவம மிக்கவர்களாக உள்ளனா். இவர்கள் இருவரும் சிறப்பாக செயற்படும்பட்சத்தில் கோப்பையை தமதாக்கிக்கொள்ளலாம் என்கிறாா் இம்ரான்கான்.

இதேவேளை, சொகைப் அக்தா் முகமட் சமி இருவருக்கும் காயமமுற்றாக குணமாகாததால் இந்தியச் சுற்றுப் பயணத்தில் அவர்கள் இடம்பெறுவது சநதேகமாகவே உள்ளது. (ற-7)

## விளையாட்டு செய்திகள்

## தென்னாபிரிக்க அணி தொடரினை வென்றது

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை தென்னாபிரிக்கா வென்றுள்ளது.

7 போட்டிகள் கொண்ட இத் தொடரில் 6போட்டிகள் முடிவடைந்த நிலையில் தென்னாபிரிக்கா 3:1என்ற முன்னிலையில் தொடரையும் கைப்பற்றியுள்ளது. ஒருபோட்டி சமநிலையில் முடிந்தது. ஆறாவது போட்டி மழை காரணமாக கைவிடப்படடதையடுத்து தென்னாபிரிக்காவுக்கு இந்த அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது.

1992,2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் மழைகாரணமாக தோல்விகளைப் பெற்ற தெனனாபிரிக்காவுக்கு முதன்முறையாக கிண்ணத்தை வெல்ல மழை உதவியிருக்கிறது.(க-7)

# தமிழர்களின் நிலையை அறிந்துகொள்ள வடக்கு-கிழக்கிற்கு விஜயம் செய்யுங்கள்!

## பிரான்ஸில் உள்ள தமிழர் மனித உரிமைகள் மையம் கொபி அனானுக்கு மனு

***அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் இலங்கைத்தீவின் கடலோரப் பகுதிகளின் வடக்கு-கிழக்கு தெற்குப் பிரதேசங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கைத்தீவுக்கான சர்வதேச நிவாரண நிதி உதவிகள் பற்றி எதுவும் விமர்சிப்பதற்கு இல்லை.***

***ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கையில் மனிதாபிமான செயற்பாடுகளும் அரசினால் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் சுனாமி கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட சகலரும் ஒரேவிதமான நிவாரணத்தையோ அல்லது பராமரிபபையோ இன்னும் பெறவில்லை. இலங்கை அரசு இன, மத, பிரதேசங்களின் வித்தியாசத்தின் அடிப்படையிலேயே நிவாரணங்களை வழங்கி வருகின்றன.***

***அத்துடன், தமிழர் பிரதேசமான வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரணப் பணிகளையும் அரசு சந்தேகப்பட்டு [illegible] அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றது எனக் குற்றஞ்சாட்டி ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபிஅனானுக்கு, பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையம் மனு ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.***

அம்மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அண்மையில் ஆசியாவில் ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பின் அழிவுகளை சில இடங்களில் நீங்களே நேரில் சென்று பார்வையிட்ட காரணத்தினாலும், உங்கள் நிறுவனத்தைச சார்ந்த பல உத்தியோகத்தர் பாதிக்கப்பட்ட இடங்களில் நேரில் நின்று பணி செயயும் காரணத்தினாலும், நாம் உங்களுக்கு சுனாமி கடல் கொந்தளிப்பின் அழிவுகளைப பற்றி பெரிதாக எடுத்து கூற வேண்டிய அவசியமில்லை என நாம் நம்புகிறோம்.

இலங்கைத்தீவின் கடலோரப பகுதிகளான வடக்கு, கிழக்கு, தெற்கு பிரதேசங்கள் சுனாமியினால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கைத தீவுக்கான சர்வதேச நிவாரண நிதி உதவிகள் பற்றி எதுவும் விமர்சிப்பதற்கு இல்லை. ஆனால், துரதிஷ்டவசமாக இலங்கைத்தீவில் மனிதாபிமான செயற்பாடுகளும் இலங்கை அரசினால அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால், சுனாமி கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட சகலரும் ஒரே விதமான நிவர்ரணத்தையோ அல்லது பராமரிப்பைப் பெறவில்லை. இலங்கை அரசு இன, மத, பிரதேச வித்தியாசங்களின அடிபபடையிலேயே நிவாரணங்களை வழங்கி வருகின்றன. இதேவேளை, பாதிக்கப்பட்டோர் தற்காலிகமாகப் பராமரிக்கப்படும் முகாம்களும், நிவாரண விநியோகங்களும் அரசினால் விசமத்தனமான நோக்கங்களுடன் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதனால், தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அரச சார்பற்ற நிறுவனங்களினால் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நிவாரண வேலைகள் தடைப்படுகின்றன.

ஏற்கனவே வடக்கு-கிழக்கில் வாழும் மக்கள் கடந்த இருபது வருட கால யுத்தத்தினால் இலங்கை அரசின் மிகவும் மோசமான மனித உரிமை மீறல்களுக்கும், மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர். நோர்வே அரசாங்கத்தின் முன்னெடுப்புக்களின பலனாக 2002ஆம் ஆண்டு பெபரவரி மாதம் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஓர் போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் வரை வடக்கு-கிழக்கில் வாழும் மக்கள் தினம்தோறும் குண்டு விமான வீச்சுக்கும், ஷெல் தாக்குதலுக்கும் ஆளாக்கப்பட்டு, ஆயிரக்கணக்கில் பல தடவைகள் வேறுபட்ட இடங்களுக்கு இடம் பெயர்ந்தும் சென்றனர். அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நீண்டகாலப் பொருளாதார தடையினால் பசி, பட்டினி, நோய் என்று பலவிதப்பட்ட சொல்லொணா கஷ்டங்களையும் மக்கள் எதிர்நோக்கினர்.

நடைமுறையிலிருந்து வரும போர் நிறுத்த காலத்தைப் பயனபடுத்தி மக்கள் தமது வாழ்க்கையை படிப்படியாக மறுசீரமைத்து வரும் வேளையிலே வடக்கு-கிழக்கில் கடலோரப் பகுதிகளில் வாழும் மக்கள் சுனாமி இயற்கை அழிவுக்கு மிகவும் மோசமான முறையில் ஆள்ாக்கப்பட்டனர்.

வடக்கு-கிழக்குப் பிரதேசம் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம ஆகிய எட்டு நிர்வாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவறறில் வவுனியா, கிளிநொச்சி தவிர்ந்த மற்றைய மாவட்டங்கள் யாவும் கடலோரப் பிரதேசங்கள். இவை மிகவும் மோசமாக சுனாமி கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கில் மட்டும் 21 ஆயிரம் மக்களுக்கு மேல் சுனாமியினால் பலியாகியுள்ளனர். இதில பெரும்பாலானோர் சிறுபிள்ளைகளும், பெண்களுமாவர். சிறுபிள்ளைகளின் பராமரிப்பு இல்லம், குடிமனைகள், தேவாலயங்கள், கோயில்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் போன்ற கட்டடங்களில் பெரும்பாலானாவை முற்றாக அழிக்கப்பட்டும், மோசமாகச் சீருலைக்கப்பட்டுமுள்ளன. குடிநீர் மருந்து வசதிகள் இல்லாதும் போக்குவரத்து, மின்சார வசதிகள் யாவும் முற்றாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளன.

மீன்பிடித்தொழில் மோசமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளது. பெருந்தொகையான மீன்பிடித் தொழிலாளர்கள் பலியாகியும், மீன்பிடி உபகரணங்கள் யாவற்றையும் இழந்தும் உள்ளனர். இதேவேளை, விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறு கைத்தொழில்கள் யாவும் முற்றாக அழிக்கப்பட்டும் சீருலைக்கப்பட்டுமுள்ளது.

இன்றும் சுனாமி கொந்தளிப்பினால் பலர் தமது உற்றார் உறவினர்களைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். பலர் முகாம்களிலும், வைத்திய நிலையங்களிலும் சிகிச்சை பெறுகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், சகோதரங்களை இழந்த பலர் உளரீதியாகப் பாதிக்கப்பட்டு அல்லல்படுகின்றனர்.

சுனாமி கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டோரின் பெயரால் இலஙகை அரசாங்கத்திற்கு வெளிநாட்டு உதவிகள் பெருமளவில் கிடைக்கப்பட்ட பொழுதிலும், வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்டோருக்கு அரசு எந்தவித நிவாரணங்களையோ சிங்கள பிரதேசங்களுக்கு அனுப்பியதுபோல் சமனாகவோ அல்லது மனிதாபிமான அடிப்படையில் அனுபபி வைக்கத் தவறியுள்ளது. இலஙகைத்தீவில் சுனாமி கடல கொநதளிப்பனால் பாதிக்கப்பட்டோரில மூன்றில் இரண்டு விதமான மக்கள் வடக்கு-கிழக்கு கரையோரப் பகுதியைச் சார்ந்தவர்கள். ஆனால் இலங்கை அரசின் இன, பிராந்திய ரீதியான போக்கின் காரணமாக வடக்கு-கிழக்கு மக்களுக்கு நிவாரணங்கள் கொடுப்பதில் அரசு அதிக அக்கறை செலுத்தவில்லை. இதேவேளை, வெளிநாட்டு நிவாரண, நிதி உதவிகளை இலங்கை அரசும், அதன் உத்தியோகத்தர்களும் துஷ்பிரயோகம் செய்வதுடன் மோசடியிலும் ஈடுபட்டுள்ளனர்.

சுனாமி ஏற்பட்ட நாளிலிருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மட்டுமே, வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்டோருக்கான மனிதாபிமானத் தேவைகளை எந்தவித பாகுபாடும் இன்றி தொடர்ந்து செயதுவருகிறது. இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் கடினமான மீட்புப் பணிகளை செய்து வந்தள்ளனர். வடக்கு-கிழக்கில் வாழும் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் சேவையை மிகவும் பாராட்டுகின்றனர். தற்பொழுது, வேறு பல அரச சார்பற்ற நிறுவனங்களும், சில சர்வதேச நறுவனங்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் சேர்ந்து சேவை செய்கின்றனர்.

சுனாமி கொந்தளிப்பினால் இலங்கைத்தீவு கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி பாதிக்கப்பட்ட பொழுதிலும், இலங்கை ஜனாதிபதி அவசர காலப் பிரகடனத்தை சில மாவட்டங்களில் மட்டும் ஜனவரி 4ஆம் திகதி அன்றே அறிமுகம் செய்திருந்தார்.

இதனால் வடக்கு-கிழக்கில் வாழும் மக்கள் அரசின் கபட அரசியல் இராணுவத் திட்டங்களையிட்டு சந்தேகம் கொண்டுள்ளனர்.

இதனால் மதிப்புக்குரிய செயலாளர் நாயகம் அவர்களே,

நீங்கள் இலங்கைத் தீவிற்கு சென்றிருந்ததை அறிந்த சுனாமியினால் பாதிக்கப்பட்ட சகல மக்களும் பெரும் சந்தோஷமும ஆறுதலும் அடைந்தனர். துரதிஷ்டவசமாக அரசு உங்களை மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு செல்ல அனுமதிக்காத காரணத்தினால் உங்களை நேரில சந்திக்கவோ, குறைகளை உங்களிடம் கூறவோ பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கு சந்தர்பபம் கிடைக்கவில்லை. இது பலருக்கு பெரும் ஏமாற்றத்தையும் மன வருத்தத்தையும் கொடுத்துள்ளது.

இதேவேளை, நீங்கள் அங்கிருந்து புறப்படும் முன் பததிரிகையாளரிடம் கூறிய செய்தி அவர்களுக்கு மிக ஆறுதலையும கொடுத்துள்ளது. நான் மறுபடியும் இங்குவர எண்ணியுள்ளேன. இங்கு பாதிக்கப்பட்ட சகல இடங்களையும் பார்வையிடவுள்ளதுடன், சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கவும் உதவவிரும்புகிறேன் என்று குறிப்பிட்டுள்ளீர்கள்.

சுனாமியினால் பாதிக்கப்பட்டு, உற்றார் உறவினரை இழந்து வேதனைகளுடன் உள்நாட்டில் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழும் பாதிக்கப்பட்டோர் உங்களை கூடிய விரைவில சந்திக்க விரும்புகின்றனர். உங்கள் விஜயம நிச்சயம் பாதிக்கப்பட்டோரின் வாழ்வில் ஓர் உறசாகத்தையும், ஓர் திருபபத்தையும் ஏற்படுத்துமென நாம் நம்புகிறோம். அதேவேளை, வடக்கு-கிழக்கில் சுனாமி கொந்தளிப்பனால ஏற்பட்ட விளைவுகளை நீங்கள் நேரில்காண ஓர் நல்ல சந்தர்ப்பமாகவும் அமையும்.

எமது அமைப்பினால் அனுப்பிவைக்கப்படும் இவ் மனுவை இததுடன் இணைக்கப்பட்ட 28 வேறுபட்ட அரசசார்பற்ற நிறுவனஙகள் பங்களாதேஷ், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, தென் ஆபிரிககா, ஸ்பெயின், சுவிற்சர்லாந்து, பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து ஆதரிக்கின்றன எனத் தெரிவிக்கப்படடுள்ளது.

(க-4)

# தமிழர்களின் இயல்பு வாழ்வைச் சிதைப்பதற்கு அரசு கிழக்கை களமாகப் பயன்படுத்தி வருகிறது

## யாழ்.மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றியம் ஆட்சேபம்

**போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு நிலையை சிதைப்பதில் இலங்கை அரசு முனைப்போடு செயற்பட்டு வருகிறது. இதற்கு களமாக கிழக்கு மாகாணத்தைப் பயன்படுத்தி வருகிறது. அங்கு தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் படுகொலைகள் இதற்கு சான்று பகர்கிறது.**

இவவாறு யாழ்மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றியம் குற்றமசாட்டியுள்ளது. இதுகுறித்து அவ் அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

தமிழ்த்தேசிய பற்றுணர்வாளர்கள விடுதலைபபுலிப் போராளிகள் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டு வருவதால் சமாதானம் கேள்விக்குறியாக மாறி வருகிறது. சமாதான முயற்சிக்கு தடைபோட்டு வந்த அரசு ஆழிப பேரலை சுனாமிப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்பவும் தடைகளைப் போட்டுவருகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்ப முனையும் விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்தும் நோக்கோடு மட்டு.-அம்பாறை அரசியல் துறைப பொறுப்பாளர் இ.கௌசல்யன் கொல்லப்பட்டுள்ளார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இது தொடர்பாக யாழ்ப்பாணக் குடாநாடு தழுவிய பூரண கதவடைப்பையும், துக்க தினத்தையும் கடைப்பிடிக்குமாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் அழைப்பு விடுததுள்ளதற்கு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஆதரவு தெரிவிக்கிறது.

லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளும் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அசந்திர நேருவும் இலங்கை இராணுவத்தினரின் திட்டமிட்ட சதியால் கொல்லப்பட்டதைக் கண்டிக்கிறோம்.

அத்துடன், புனானைப் படுகொலைச் சம்பவத்திற்கு காரணமாகவிருககும் கும்பலை இனங்கண்டு அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அரசாங்கத்தைக் கோருகிறோம். புலிகளை நசுக்குவதை நோக்காகக்கொண்டு செயற்படும் குழுக்களை இனங்காணாவிட்டால் அது சமாதான முயற்சிகளுக்கு பெரும் குந்தகமாக அமையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் உள்ளது. (ப)

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் - குறள்

வலம்புரி

## யாழ். அரச அதிபரின் நியாயமான கோரிக்கை

யாழ்ப்பாண மாவட்டத்தின் அரச அதிபராக பதவியேற்றுள்ள கே.கணேஸ் அவர்கள் நிர்வாகப் புலத்தில் ஆழமான பட்டறிவைக் கொண்டவர். வவுனியா மாவட்டத்தின் அரச அதிபராக இருந்த போது மூவின மக்களையும் சம கண்கொண்டு சுமுகமான நிர்வாகத்தை திறமையாக ஆற்றியவர்.

அவர் தற்போது யாழ். மாவட்டத்தின் அரச அதிபராக பொறுப்பேற்றிருப்பது அவரின் பட்டறிவை யாழ்ப்பாண மக்கள் பெற்றுக்கொள்வதற்கு ஓர் சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

இவ்வாறு நிர்வாக திறமைமிக்க யாழ்ப்பாண அரச அதிபர் கணேஸ் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் முக்கியமான கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் நேர்மையான கணக்கறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்பதே அவர் முன்வைத்த கோரிக்கையாகும்.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களாயினும் சரி, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களாயினும் சரி அவற்றின் செயற்பாட்டில் யாழ்ப்பாண மக்களுக்கு நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏன்? எதற்காக? இயங்குகின்றன என்பது தெரியாமலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஏதோ ஒரு சிலருக்கு பதவி - பணம் கிடைப்பதற்கும் அவர்கள் வாகனங்களில் கொடிகளை கட்டிக்கொண்டு ஓடித் திரிவதற்குமாக அந்த அமைப்புகள் இயங்குகின்றன. சுருங்கக் கூறின் பதவி ஆசை பிடித்தவர்கள், தம்மை ஆற்றுப்படுத்திக் கொள்வதற்கான ஓர் இடமாகவே யாழ்ப்பாணத்திலுள்ள உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களை மக்கள் கருதுகின்றனர்.

அதே நேரம் சில அரச சார்பற்ற நிறுவனங்களில் ஊழல் மோசடிகள் நிறைந்திருப்பதாகவும் பேசப்படுகின்றது. எந் நோக்கில் இயங்குகின்றோம் என்பதைக்கூட மக்களுக்கு தெளிவுபடுத்தமுடியாத அரச சார்பற்ற நிறுவனங்கள் இருந்து என்ன இலாபம் என்பது மக்களின் கேள்வி?

இதனை யாழ். அரச அதிபர் பதவியேற்ற ஒரு சில வாரங்களிலேயே இனங்கண்டு விட்டார். அதன் காரணமாகவே அரச சார்பற்ற நிறுவனங்கள் நேர்மையான கணக்கறிக்கைகளை முன்வைக்கவேண்டும் என்ற கோரிக்கையை அவர் முன்வைத்துள்ளார்.

அவரால் முன்வைக்கப்பட்ட மேற்போந்த கோரிக்கையானது யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் நேர்மையான கணக்கறிக்கைகளை முன்வைப்பதில்லை என்பதை நாசூக்காக வெளிப்படுத்தி நிற்கின்றது.

இதேபோல் யாழ்ப்பாணத்தில் இயங்கும். சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது செலவில் மிகப் பெருந்தொகைப் பணத்தை தமது சுகபோக வாழ்க்கைக்காக செலவிடுகின்றன. குதூகலமான வாழ்க்கைக்காக அவர்கள் செலவிடும் பணம் யாழ்ப்பாணத்தில் வறுமைப்பட்டவர்களுக்கு உதவவோ அன்றி கல்வித் தேவைக்கு பயன்படுத்தவோ செலவிடப்படுமாக இருந்தால் அதனால் மிகப்பெரும் பயனை யாழ்ப்பாண மக்கள் அனுபவிக்கமுடியும்.

எதுவாயினும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் நேர்மைத் தன்மையுடன் இயங்க வேண்டுமாயின் அதற்கு முன்மாதிரியாக யாழ்ப்பாணத்தில் இயங்கும் உள்நாட்டு சர்வதேச அமைப்புக்கள் நடந்துகாட்ட வேண்டும். இதற்கான ஒரு வழியே அரச அதிபர் கூறியதுபோல் நேர்மையான கணக்கறிக்கைகளை முன்வைப்பதாகும்.

## அவசரகாலச் சட்ட விதியின் கீழ்
# தமிழ் மக்களுக்கு எதிராக திருமலையில் மற்றொரு சதி

(திருகோணமலை)

சுனாமி அனர்த்தத்தையடுத்து கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் புதிதாக வீடுகளை அமைக்கக் கூடாதென அரசாங்கம் தெரிவித்துள்ள அதேநேரம், திருகோணமலை கோணேசர் ஆலயம் அமைந்துள்ள கோட்டை பிரதேசத்திலிருந்து அலஸ்தோட்ட முகாம் வரையுள்ள கடற்கரைப் பிரதேசத்திற்கு இந்தத் தடை விதிக்கப்படவில்லையென அவசரகால சட்ட விதிகளின் கீழ் திருத்தப்பட்ட பிரகடனம் ஒன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.இந்தத் தற்காலிக பிரகடனம் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டிருக்கிறது.

திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமே அமுலில் இருக்கக் கூடியதாக இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகாமையிலுள்ள சமுத்திரகம எனப் பெயர் சூட்டப்பட்டுள்ள இடத்திலும் வீரநகர், ஸ்ரீமாபுரம் போன்ற இடங்களில் சட்ட விரோதமாகக் குடியேற்றப்பட்டுள்ள பெரும்பான்மையினத்தவரை நிரந்தரமாகப் புதிய வீடுகளும், தொடர் மாடிகளும் அமைத்துக் குடியேற்றுவதே இதற்கான நோக்கமாகும்.

இந்தக் கபட நாடகத்தின் முதற்கட்ட அரங்கேற்றமாகவே அண்மையில் அரச அதிபரால் கூட்டப்பட்ட மாநாட்டில் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்னமாகி இருந்தார். திருகோணமலை நகரத்தில் சட்டவிரோதமாகக் குடியேறிய, சுனாமியால் எந்தப் பாதிப்பும் ஏற்படாத பெரும்பான்மை இனத்தவரை வசதி வாய்ப்புக்களுடன் நிரந்தரமாகக் குடியேற்ற இச்சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவே இப்பகுதி மக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை தெரிவித்திருப்பதாவது,

ஜனாதிபதி பாதிக்கப்பட்ட மக்களின் மீது இன, மத, மொழி வேறுபாடின்றி நல்லெண்ணத்துடன் இந்நடவடிக்கை எடுப்பதாகத் தீர்மானித்திருந்தால், இந்த எல்லை திருகோணமலைக கோட்டையிலிருந்து புல்மோட்டை வரையுள்ள முழுக் கடற்கரைப் பிரதேசத்தையும் உள்ளடக்கக் கூடியதாக இப்பிரகடனம் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், அத்துமீறிய பெரும்பான்மையின குடியேற்றவாசிகள் மட்டுமே பயன் பெறக்கூடிய வகையில் திட்டமிட்ட அடிப்படையில் திருகோணமலையில் தமிழ் மக்களினது நலனுக்கெதிராக ஜனாதிபதியால் எடுக்கப்பட்ட இந்த முடிவு மிகப் பெரியதொரு சதி என்றே கருதுகின்றோம்.

தொடர்ந்தும் இவ்வாறான தமிழ் மக்களுக்கெதிராக சதி வேலைகளில் ஈடுபடுவதன் மூலம் ஜனாதிபதியும் அரசாங்கமும் சமாதானத்தில் தங்களுக்கு எதுவித உடன்பாடும் இல்லையென்பதைத் தெரிவிக்கின்றார்கள் என்றே தமிழ் பேசும் மக்கள் கருதுகிறார்கள்.

இத்தகைய செயற்பாடானது இப்பிரச்சினைக்கான தீர்வில் மிகப் பெரிய விரிசலை உண்டாக்கி தமிழ் பேசும் மக்கள் தனித்தே வாழ வேண்டுமென்ற உறுதியை உருவாக்கு மெனறு எச்சரிக்க விரும்புகின்றோம்.

அதேநேரம், ஜனாதிபதி மேற்படி பிரகடனத்தை மீளப் பெற்றுக கொள்ள வேண்டும் என வலியுறுத்துகின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ற)

# தமிழ்ப் பிரதேசங்களுக்கான உதவிகள் நேரடியாக வழங்கப்பட வேண்டும்
## அகாசியிடம் தமிழ்ச்செல்வன் கோரிக்கை

(மட்டக்களப்பு)

தமிழர் தாயகப் பிரதேசங்களில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவென வெளிநாட்டு உதவிகள் நேரடியாகத் தரப்படவேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஜப்பானின் விஷேட பிரதிநிதி யசூசி அகாசியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் அகாசிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இக்கோரிக்கையினை, தமிழ்ச்செல்வன் விடுத்தார்.

சுனாமியினால் எமது மக்கள் பேரழிவினைச் சந்தித்திருக்கின்றார்கள். எங்களுடைய ம்க்கள் சந்தித்திருக்கின்ற இநத அழிவில் இருந்து மீள்வதற்கு சர்வதேச சமூகத்தின் உதவிகள் கட்டாயம் தேவை.

சர்வதேசத்தின் இந்த உதவிகள் இலங்கை அரசாங்கத்தின் ஊடாக வழங்கப்படுமேயானால் முக்கியமாக எங்களுடைய மக்களை அவை வந்தடையமாட்டாது. ஆகவே சர்வதேச சமூகத்தின் உதவகள வடக்கு-கிழக்குக்கு நேரடியாகக் கிடைக்கக் கூடிய வகையில் உரிய வழி முறைகளுக்கு ஊடாகக் கொண்டு வரப்பட வேண்டும்.

அதற்கு ஜப்பான் அரசாங்கம் முழு அளவில் உறுதிப்பாட்டுடன் செயற்படவேண்டும். எங்களுடைய பிரதேச மக்களின மீள்கட்டுமான,மனிதாபிமானப பணிகளுக்கு நேரடியாக ஜப்பான் அரசாங்கம் உதவ வேண்டும் எனவும் இச் சந்திப்பின்போது தமிழச்செல்வன் அகாசியிடம் கோரிக்கை விடுத்தார். (ற-4)

# இலங்கை ஜனாதிபதியின் பாகிஸ்தான் விஜயம் இந்திய விவகாரங்களுடன் தொடர்புடையதல்ல
## முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அண்மைய பாகிஸ்தானிய விஜயமானது இந்திய விவகாரங்களுடன் தொடர்புடையதல்ல என முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகர் எஸ். சட்வால் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியின் பாகிஸ்தான் விஜயமானது, இந்தியாவுடன் தொடர்புடையதல்ல. ஏனெனில், கடந்த அரை நூற்றாண்டு காலமாக இலங்கை இந்தியாவுடன் நட்புறவினைப் பேணி வந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், பாகிஸ்தானும் இலங்கையும் வெளியுலகிற்குச் சொல்ல விரும்புவது என்னவெனில், சார்க் நாடுகளுக்கிடையிலான உறவுகள் சுமுகமாகவே உள்ளன. சார்க் மாநாடு நடைபெறாமல் ஒத்திவைக்கப்பட்டது இந்தியாவின் மறுப்பினாலேயாகும் என்றும் அவர் கூறினார்.

மேலும், இலங்கை அரசாங்கமானது பாகிஸ்தானுடனும் ஏனைய இஸ்லாமிய நாடுகளுடனும் சுமுகமான உறவினைக் கொணடுள்ளது. இதன்மூலம் இலங்கை வாழ் முஸ்லிம்களின் வாக்குகளை சிங்களவர்களுக்கு அளிக்க வைக்க முடியும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் அவர் மேலும தெரிவித்துள்ளார்.

(ற-6)

# சம்பள நிலுவைகளை பெற்றுக் கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட கோப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கான 2ஆம் கட்ட சம்பள நிலுவையின் மிகுதிக்கொடுப்பனவுகள் இன்று திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளன.

இவற்றுக்கான காசோலைகளை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் பிற்பகல் 2.30 மணி முதல் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாமென யாழ்.கல்வி வலயக் கணக்காளர் கே.ஆர்.துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைக் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்டதாயின்,அவற்றிற்கான காசோலைகளை மேற்படி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலுவைக்கான முதற்கட்டக் கொடுப்பனவுகள் கடந்த மாத நடுப்பகுதியில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-7)

## தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்

மெதுவாக படிப்படியாக நாம் நம்மைப் பயிற்றுவிக்க வேண்டும் . இது வேடிக்கை அல்ல. ஒரு நாள் அல்ல. பல ஆண்டுகள் அல்ல. பல பிறவிகள் ஆனாலும் ஆகலாம். பரவாயில்லை முயற்சி தொடர வேண்டும். தெரிந்தே நீங்களாகவே முயற்சியைத் தொடர வேண்டும். அங்குலம் அங்குலமாக நாம் முன்னேறுவோம். கடைசியில் உண்மையான செல்வத்தை உணர்வோம். அதனை யாரும் நம்மிடமிருந்து பறிக்க முடியாது. யாரும் அழிக்க முடி யாது. அந்த இன்பத்தை எந்தத் துயரமும் அழிக்கமுடியாது.

சுவாமி விவேகானந்தர்

# பேரினவாதிகளின் சதிமுயற்சிகளை முறியடிக்க ஒன்றிணைவோம்

## தமிழ்ச்செல்வன் அறைகூவல்

(மட்டக்களப்பு)

தென்னிலங்கை பேரினவாத சக்திகளின் சதி முயற்சிகளையும் முறியடிக்க தமிழ் மக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர்களின் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் நயவஞ்சத்துடனேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதனை நாம் இன்று நேற்றல்ல கடந்த 50 ஆண்டுகளாக அவதானித்துள்ளோம். குறிப்பாக யுத்தம் நடைபெற்ற 20 வருட காலத்தில் அதிகமாகக் கண்டுள்ளோம் என்று தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலயுத்தம் காரணமாக தென் தமிழீழ மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ளதாகக் சுட்டிக்காட்டிய தமிழ்ச்செல்வன் இவ்வாறு பாதிப்படைந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்த அரச அதிகாரிகள் முழுமூச்சாகச் செயற்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

கொக்கட்டிச் சோலையில் விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவில் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட தளபதி ராம், மட்டக்களப்பு- அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் மார்ஷல், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் கரிகாலன், மட்டு-அம்பாறை மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ச-4)

## பல்கலைக்கழக புகுமுக மாணவருக்கு வழிகாட்டல் நிகழ்வு இன்று ஆரம்பம்

### பெற்றோருடன் மாணவர் செல்ல முடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வின் ஆரம்ப விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் 300 புகுமுக மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் கலந்துகொள்கின்றார். அத்துடன் பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், மாணவ ஆலோசகர்கள், உதவிப்பதிவாளர்கள், நிதியாளர், நூலக வியலாளர்கள், மாணவர்சார் பிரதிநிதிகள் போன்றோர் தத்தம்துறைசார் விளக்கங்களை மாணவர்களுக்கு வழங்கவுள்ளார்கள்.

தொடர்ந்து நான்கு நாட்களுக்கு இவ் வழிகாட்டல் நிகழ்வுகள் நடைபெறும். புகுமுக மாணவர்கள் விரும்பினால் தமது பெற்றோருடன் இவ் ஆரம்ப விழா நிகழ்வில் கலந்துகொள்ள முடியுமெனகலைப் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

(ப-95)

## கலந்துரையாடல்

(பொன்னாலை)

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் சித்திரபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பி.ப. 1.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மாகாணக் கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் சுனாமி ஓவியப்போட்டி தொடர்பான விளக்கங்கள் மற்றும் வழிப்படுத்தல்கள் என்பனவும் இடம் பெறவுள்ளன.

(ந-49)

## ஊடகப் பேச்சாளர் விபத்தில் படுகாயம்

(புங்குடுதீவு)

பிறவுண் வீதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள்- ஆட்டோ விபத்தில் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் ஊடகப்பேச்சாளர் ப.கனகலிங்கம் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3மணியளவில் இடம் பெற்ற விபத்தில் காயமடைந்த கனகலிங்கம் தற்போது யாழ்.போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ப-126)

## உலங்கு வானூர்தி வழங்க இறுதி நேரத்தில் மறுப்பு

(மட்டக்களப்பு)

படுகொலை செய்யப்பட்ட சந்திரநேரு அரியநாயகத்தின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மட்டு அம்பாறை. மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பானு ஆகியோருக்கான உலங்குவானூர்தியை வழங்குவதற்கு அரசு இறுதி நேரத்தில் மறுத்துவிட்டது.

மட்டக்களப்பில் இருந்து அம்பாறை திருகோவிலில் நடைபெறும் இறுதி நிகழ்வுக்கு செல்வதற்காக நோர்வே அனுசரணையாளர்களூடாக விடுதலைப்புலிகள் உலங்குவானூர்தியை அரசிடம் கோரியிருந்தனர்.

முதலில் உலங்குவானூர்தியை வழங்க ஒப்புக் கொண்டிருந்த அரசு இறுதி நேரத்தில் அதனை வழங்கவில்லை. (ரு- 4)

## மாடு மேய்க்க சென்ற சிறுவன் சடலமாக மீட்கப்பட்டான்

(மருதங்கேணி)

மாடு மேய்க்கச் சென்ற சிறுவன் மறுநாள் காலை கேணிஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

வல்லிபுரக் குறிச்சியைச் சேர்ந்த புற்றாலை மகாவித்தியாலய மாணவர் சி.சிறிககாந்தரூபன் (வயது 16) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவர்.

நேற்று முன்தினம் மாலை மாடுமேய்ப்பதற்காக சென்ற சிறுவன் நேற்று வரை வீடு திரும்பவில்லை இதனையடுத்து பெற்றோர் உறவினர்கள் என பலர் தேடுதலில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் புலோலி தெற்கிலுள்ள கொட்டுக்கேணியினுள் இருந்து அச்சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார். மீட்கப்பட்ட சடலம் மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மரணவிசாரணை இடம் பெற்றது.

மரண விசாரணையை பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிவான் சபா இரவீந்திரன் மேற்கொண்டார் பிரேதப்பரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை மேற்கொண்டார்.நீரில்மூழ்கியதால் ஏற்பட்ட மரணம்என தீர்ப்பளிக்கப்பட்டது. (ச-35)

## பிரச்சினைக்குத்....

உணர்ந்து செயல்வடிவம் கொடுக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தமக்கிடையேயான முரண்பாடுகளை பேசித் தீர்த்துக் கொள்வதே சிறந்த வழியாகும். அதுவே சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவும். விடுதலைப் புலிகள் அணியிலிருந்து கருணா விலகியதன் பின்னர் இதுவரை 66 படுகொலைகள் இடம்பெற்றுள்ளதுடன் வடக்கு - கிழக்கு பகுதிகளில் அரசியல் படுகொலைகளை தடுத்து நிறுத்த இயலாமை குறித்து அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பாகுபாடு இன்றி சம அளவில் பொறுப்பேற்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் அண்மையில் படுகொலை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கொல்லப்பட்டமை யுத்தநிறுத்தத்தை பாதிக்கும் செயலாகும் எனக் கூறிய அகாஷி தனது கவலையையும் வெளியிட்டார்.

மக்களுக்கு ஜப்பான் அரசு உள்ளிட்ட சர்வதேச நாடுகள் வழங்கிய உதவிகள் அனைத்தினையும் அரசாங்கம் பயன்படுத்தும் விதம் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும் என தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியினர் தமது நிலைப்பாட்டில் மாற்றங்களை வெளிப்படுத்தி உள்ளதினால் அவர்களுடன் சமாதானம் தொடர்பில் ஏனைய விடயங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-04)

## புலிகளிடம் மர்ம...

ஹிங்குராகொடவில் இருந்து வன்னி நோக்கிச் சென்ற மேற்படி உலங்கு வானூர்தி வவுனியாவில் இறங்கி எரிபொருள் நிரப்பிவிட்டு ஏ-9 பாதைக்கு மேலாக பறந்து கிளிநொச்சியை அண்மிக்கும் வேளையில் உலங்கு வானூர்தியில் பொருத்தப்பட்டிருந்த விமான எதிர்ப்பு ஏவுகணை தாக்காமல் இருப்பதற்காக பொருத்தப்பட்டிருந்த விசேட கருவிகள் திடீரென தொழிற்பட ஆரம்பித்துவிட்டதாக அவ் விமானி தெரிவித்துள்ளார் என்றும் இந்த விசேட இலத்திரனியல் கருவி செக்கனுக்கு 17 என்ற அதிர்வில் செயற்பட்டதாகவும் கிளிநொச்சியில் தரையிறங்கி கேணல் சொர்ணத்தை ஏற்றிக்கொண்டு வரும்போது குறிப்பிட்ட இடத்திற்கு மேலாக பறக்கும்போது அந்த எச்சரிக்கைக் கருவிகள் செயற்பட்டதாகவும் அவ் விமானியை மேற்கோள் காட்டி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ் எச்சரிக்கை தொழிநுட்பக் கோளாறு காரணமாக ஏற்பட்டதா அல்லது விமானி இது விடயத்தில் கதை விடுகிறாரா என்பது பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட்பெரேரா விடுதலைப் புலிகளிடம உள்ள விமானங்கள் மற்றும் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் குறித்த தகவல்கள் அடங்கிய முழுமையான அறிக்கை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளேன். இது குறித்து இறுதியான முடிபினை ஜனாதிபதி மேற் கொள்ள வேண்டும். அத்துடன் இது தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றினை விரைவில் அறிவிப்பார் என தெரிவித்தார்.

(த-04)

## சமாதான முயற்சி...

செல்ல முடியும். இவ்வாறு நாட்டை ஆட்சி செய்யமுடியாது. இந்தப் பிரச்சி னைக்கு தீர்வுகாண வேண்டுமானால் முத லிருந்தே ஆரம்பிக்க வேண்டும். பிரபாகரனைவிட எமது ஆட்களுக்கு என்னைக் கொல்ல வேண்டியிருக்கிறது. எவ்வாறாயினும் அரசியலிலிருந்து ஓய்வுபெறுவதற்கு முன்னர் இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு காணவேண்டும் என்பதே எனது நோக்கம். இதற்கு மக்களின் ஆதரவு இருந்தால் முதலில் அதனை நிறைவேற்றப் போவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(08)

## சிறைக்கைதிகள்...

மெனறாகலை சிறைச்சாலை நேற்றுக காலை வழமையான உடற் பயிற்சிக்குப் பின்னர் குறிப்பிட்ட நான்கு கைதிகளும் கூரை மீது ஏறி உண்ணாவிரதம் இருப பதாகவும் இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திற்கு தாங்கள் அறிவித்ததாகவும் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். கைதிகள் போராட்டத்தையடுத்து சிறைச்சாலைக்கு மேலதிக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது.

(ச-04)

## அனுராவிடம்...

நாடுதிரும்பி இருந்தார்இலங்கையின் கரையோரம் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. மேற்படி கடிதத்திற்கான பதிலை அமைச்சர் வழங்கிய பின்னர் தகுந்த நடவடிக்கையை ஜனாதிபதி கட்சி மட்டத்திலும் அரசாங்கமட்டத்திலும் எடுக்க விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அனுரா மேல் விளக்கம் கோராதது ஏன் என ஜனாதிபதி கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனாவை கேட்டிருக்கிறார். இவ் விடயம் தனது பதவி அதிகாரத்திற்கு அடங்கவில்லை என அவர் பதிலளித்திருக்கிறார். அதன் பின்னரே ஜனாதிபதி கடிதம் அனுப்பியிருந்தார்.

இதேவேளை மேற்படி கடிதத்திற்கு தான் பதிலளிக்கப்போவதில்லை என அனுரா தனது நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளார். மேலும் இவ் விவகாரத்தில் தனது சகோதரி வீணாக காலம் கடத்திவிட்டார் என்றும் அனுரா கூறியிருக்கிறார்.






இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.